உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-150

நவம்பர் 16-30 2022

விருப்ப சந்தா
செலுத்த
ஸ்கேன் செய்யவும்

www.aanmeegamalar.com
e-magazine



# வாபரனை வாபராக மாற்றி சதி

## ஐயப்ப புராணத்தில் இடைச்செருகல்

www.aanmeegamalar.com

# மனப் போராட்டமா? ஆதித்ய ஹ்ருதயம் படியுங்கள் மனம் சாந்தமாகும்



மனதளவில் பிரச்சனையால் அவதிப்படுபவர்கள், ஆதித்ய ஹ்ருதயம் படித்து வந்தால் மனப் பிரச்சனைகள் எளிதாக தீரும்.

இறைவனுக்கு ஏற்பட்ட மனப்போராட்டத்தையே இந்த ஆதித்ய ஹ்ருதயம் போக்கியுள்ளது என்றால் மனிதர்களான நமது மனக் குறை போக்காதா?

யுத்தத்தில் தனக்கு எதிரில் நின்றிருந்த இராவணனை வதம் செய்யும் நேரம் வந்துவிட்டதை அறிந்த ராமன் சிறிது நேரம் மௌனித்தான்.

ராமனாகப் பிறந்து ஒரு பெண்ணான தடாகையை கொன்றது, விஸ்வாமித்திரர் யாகத்தை அழிக்க வந்த சுபாகு மற்றும் மாரீசனை கொன்றது, வாலியை மறைந்திருந்து கொன்றது என ஒன்றன் பின் ஒன்றாக நினைவிற்கு வந்ததே ராமனின் தயக்கத்திற்கு காரணம்.

ஆன்மிகமலர் .காம்

இதனை அறிந்த அகத்தியர் பலவீனப்பட்ட ராமனை வீரியம் மிக்க ஸ்லோகங்களால் மட்டுமே திடப்படுத்த முடியும் என்று எண்ணி ராமனை நெருங்கினார்.

"ராமா! நீ சூரிய குலத் தோன்றல், உன் வம்சத்தை தழைக்கச் செய்வதே ஆதவன் தான், அவனது புகழ்பாடும் ஆதித்யஹ்ருதயம் ஸ்லோகத்தை சொல்கிறேன், அதை செவிமடுத்தி மனதினுள் இருத்து, அதனால் நீ முதலில் உன் மனப் போரில் வெற்றி பெறுவாய், அதன் பிறகு இராவண வதம் உனக்கு தூசி போல் அமையும்" என்றுரைத்து ராமனுக்கு ஆதித்த ஹ்ருதயத்தை உபதேசித்தார்.

அதனை செவிமடுத்த ராமன் அதை உளமாற உச்சரித்தான். இதனால் மனத் தெளிவும் புத்துணர்வும் பெற்ற ராமன், ராவணன் மீது தன் அஸ்திரங்களை ஏவி இராவண வதத்தை வெற்றி கரமாக முடித்தான்.

# அரக்கர்களின் நினைவால் உருவான ஊர் பெயர்கள்




“தஞ்சன், தாரகன் தண்டகன்” என்ற மூன்று மன்னர்கள் மிகப்பெரிய சிவ பக்தர்கள், கடுமையான தவத்தை கடைபிடித்து, தங்களை யாரும் வெல்ல முடியாத வரத்தை சிவபெருமானிடம் பெற்றனர்.

நாட்கள் செல்ல செல்ல கர்வம் தலைக்கு ஏறியது. இவர்கள் தேவலோகத்தை வென்று, அக்கிரமத்தின் உச்சத்திற்கே சென்றனர். இதன் காரணமாக கோபமுற்ற சிவபெருமான் திருமாலையும், காளி தேவியையும் அனுப்பி அம்மூவரையும் வதம் புரிந்தார்.

கெட்டவர்களாக இருந்தாலும் சிறந்த சிவபக்தர்களாக விளங்கியதால் தஞ்சன் பெயரில் “தஞ்சாவூர்”, தாரகன் பெயரில் “தாராசுரம்”, தண்டகன் பெயரில் “தண்டகம்பட்டு” என மூன்று ஊர்களுக்கும் பெயர் உண்டாயிற்று.

# கோவில் கோபுரமும் கோபுரத்தின் விளக்கமும்

ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு சக்திகள், சிறப்புகள் இருந்தாலும், அனைத்து கோவிலுக்கும் பொதுவான சிறப்புகள் ஒன்றாகவே இருக்கும், பெரிய கோவில், சிறிய கோவில் என்ற பாகுபாடு இல்லாமல், அனைத்தும் ஒரே சிறப்பை பெற்றிருக்கும், அந்த வகையில் ஒவ்வொரு கோவிலின் கோபுரத்திற்கும் ஒரே வகையான சிறப்புகளை பொதுவில் பெற்றுள்ளது.

“கோ” என்றால் இறைவன். “புரம்” என்றால் “இருப்பிடம்”. இறைவனின் இருப்பிடமே கோபுரம். என்று அழைக்கப்படும். தூரத்தில் நின்று பார்த்தாலும் தெரியும் அளவுக்கு கோபுரத்தை உயரமாகக் கட்டியிருக்கிறார்கள். சில பல காரணங்களால் கோவிலுக்குள் செல்ல முடியாத பக்தர்களுக்கும் கடவுள் கோபுரத்தில் இருந்து அருள்பாலிப்பதாக புராணங்கள் கூறு கிறது.

இதனால்தான் “கோபுர தரிசனம் பாப விமோ சனம்” என்ற பழமொழியை நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பார்கள். அப்படி ஒவ்வொரு ஊருக்கும் அழகு தருவது கோவில் ஆகும். கோவிலுக்கு அழகு தருவது கோபுரம் ஆகும். கோயில் வாசலில் அமைக்கப்படும் ராஜ கோபுரமே மற்ற கோபு



ரங்களை விட உயர மாக இருக்கும். நெடுந் தொலைவிலிருந்து பார்த்தாலே இது கம்பீரமாகத் தெரியும் . இதை ஒரு லிங்கமாக எண்ணி வணங்குவதும் உண்டு. இதனை ஸ்தூல லிங்கம் என்று சொல்வது ஐதீகம்.

“பெருமாள் குண்டா என்றால், சிவபெருமான் அண்டா, அண்டா குண்டாவுக்குள் போகாது, ஆனால் குண்டா அண்டாவிற்குள் போகும்” என்று கிருபானந்தா வாரியார் சுவாமிகளே தனது ஆன்மிக சொற்பொழிவில் கூறியுள்ளார்.

பெருமாள் கோவிலாக இருந்தாலும்,சக்தி கோவிலாக இருந்தாலும் அனைத்தும் லிங்கத் திற்குள் ஐக்கியம் என்பதை குறிப்பதற்காகவே, கோபுரத்தை லிங்கத்துடன் ஐக்கியப்படுத்தி முதலில் கோபுர தரிசனத்தை வழக்கமாக்கிவைத்தனர் நமது முன்னோர்.

அதேப்போன்று, கோபுரம் இருக்கும் இடத்திற் கும், அது நம் பார்வையில் படும் இடத்திற்கும் இடைப்பட்ட இடத்தை பூலோக கைலாசம் என்றும் அழைத்தனர். மேலும் கோபுரத்தை கடவுளின் திருவடி என்றும் கூறுவார்கள், கோவிலின் கருவறைக்கு எவ்வளவு புனிதம் உள்ளதோ அதே அளவு கோபுரத்திற்கும் உள்ளது என்பது புராணங்கள் கூறும் உண்மையாகும்.

“நின்று கோபுரத்தை நிலமுறப் பணிந்து
நெடுந் திருவீதியை வணங்கி..”

என்று பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இதன் விளக்கம், கோபுரத்தைக் கண்டவுடன் நிலத்தில் வீழ்ந்து வணங்க வேண்டும் என்பதாகும்.

“கோலக் கோபுரக் கோகரணஞ்
சூழா கால்களாற் பயனென்”

என அப்பர் சுவாமிகள் கோபுரச் சிறப்பைப் பற்றிக் கூறியுள்ளார்.

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்”

என்று கோபுர பெருமையை சொல்கிறார் திருமூலர்... இதன் மூலம் புராணங்களில் கோபுரத் திற்கு எவ்வளவு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கும் என்பதை தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

கோபுரம் என்பது சமய வரலாறு, புராணக் கதைகள், தத்துவம் முதலிய பல செய்திகளை எடுத்துக்கூறும் உயிர்த்தன்மை கொண்ட உரு வங்களாகவே உயர்ந்து நிற்கின்றன. கோபுரத்தில் தேவகணங்கள், தெய்வ உருவங்கள், பறவைகள், விலங்குகள், புராண, இதிகாசக் காட்சிகள், மனிதர்கள், தேவியர்கள், மெய்யடியார்கள் எனப் பலவகை சிற்பங்கள் இருக்கும்.

கோவில்களில் நான்கு திக்குகளுக்கும் நான்கு கோபுரங்களும், நடுவில் ஒரு கோபுரமாகப் பஞ்ச கோபுரங்கள் கட்டலாம் எனச் சிற்ப நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இவற்றை விட கோவிலைச் சுற்றியுள்ள பிரகாரங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே கோபுரங்கள் கட்டவும் மானசாரம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

அதேப்போன்று ஒரு கோவிலுக்கு பல கோபுரங் களும் இருப்பதை பார்த்திருப்போம், குறிப்பாக மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சிதம்பரம் போன்ற திருத்தலங்கள் பல கோபுரங்களுடன் காட்சி அளிக்கின்றன. இதுபோன்ற பல கோபுர அமைப்புகளுக்கு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு.

முதலாவதுகோபுரம் துவாரசோபை,
இரண்டாவது கோபுரம் துவாரசாலை
மூன்றாவது கோபுரம் துவாரப் பிரசாதம்
நான்காவது கோபுரம் துவாரஹர்மியம்
ஐந்தாவது கோபுரம் மஹாமர்யதை எனவும் அழைக்கப்படுகின்றன.

இவ்வைந்தாவது கோபுரமே மஹாகோபுரம் எனவும், ராஜகோபுரம் எனவும் சிறப்புப் பெயர் பெறு கிறது. பொதுவாக மஹா கோபுரம் எனப்படும் ராஜ கோபுரமே பெரும்பாலும் பல கோவில்களில் காணப்படும்.

இதுபோன்ற கோபுரத்திற்கு ஒவ்வொரு தளமாக ஒற்றைப் படை எண்ணிக்கையில் முடியும் வகையில் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என அமைத்திருப்பார்கள்.

அடிப்படை எண்ணிக்கையில் மூன்று நிலைகளில் இருந்து துவங்கும் என்றாலும், ஒவ் வொரு நிலைக்கும் ஒவ்வொரு பெயர் உள்ளது.

- மூன்று நிலைகள் ஜாக்கிரத், ஸ்வப்பன, சுஷுப்தி என்பவற்றைக் குறிக்கும்
- ஐந்து நிலைகள் ஐம்பொறிகளைக் குறிக்கும்.
- ஏழு நிலைகள் ஐம்பொறிகளோடு மனம், புத்தி என இரண்டும் சேருவதை குறிக்கும்.
- ஒன்பது நிலைகள் அந்த ஏழினொடு சித்தம், அங்காரம் என மேலும் இரண்டு இணைந்து வழங்கப்படும்.

ஒவ்வொரு கோவிலுக்கும் செல்லும்போதும், இந்த கோபுர நிலைகளைப் பற்றி தெரிந்து கொண்டு செல்வது சிறப்பாகும்.

வெளியில் செல்லும்போது கோபுர வாசலை காண நேர்ந்தால், முடிந்த அளவிற்கு கோவி லுக்கு சென்று இறைவனை தரிசிக்க முயற்சி செய்யவேண்டும். முடியாத கால நிலை, சூழ்நிலை ஏற்பட்டால் கோபுரத்தை வணங்கும் விதமாக இருகரத்தையும் தலைமீது குவித்து வணங்க வேண்டும், இந்த கோபுர தரிசனம் கூட கோடி புண்ணியத்தை தரும் என்பது ஆன்றோர் வாக்கு.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



# சிவபக்தியில் தமிழை இணைத்த ராஜ ராஜ சோழன்

உலகின் பல நாடுகளுக்கு தங்களது படை பரிவாரங்களை நிலை நிறுத்திய மாபெரும் மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் ராஜ ராஜ சோழன்.

சோழர்களின் ராஜ்யத்தை தென்கிழக்காசிய நாடுகளில் உண்டாக்கிய சோழ மன்னர்களின் பரம்பரையில் தோன்றிய ராஜ ராஜ சோழன் மிகப்பெரிய சிவ பக்தனாக திகழ்ந்தான், சிவ பெருமான் மீது தான் கொண்ட அளவு கடந்த பக்தியால் ஒரு ஆலயம் அமைக்க எண்ணம் கொண்டார்.

அவரின் விருப்பத்திற்கேற்ப உருவானதுதான் தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம்

அதன்படி இக்கோவில் கட்டுவதாற்கான கற்களை அண்டை மாநிலங்களிலிருந்து கொண்டு வந்தார்.

அக்கற்களை எல்லாம் சரியான அளவில் செதுக்குவதற்கு மட்டும் 25 ஆண்டுகள் கழிந்திருக்கிறது. செதுக்கிய அக்கற்களை சரியான முறையில் அடுக்குவதற்கு 9 ஆண்டுகள் ஆகியுள்ளன. ஆகா மொத்தம் 34 ஆண்டுகள் செலவழித்து இந்த அற்புதமான கோவிலை காட்டியுள்ளார் ராஜ ராஜ சோழன்.





இந்த கோவிலில் இருக்கும் சிவபெருமானின் லிங்கம் செய்வதற்கான கல் தற்போதைய "மத்திய பிரதேச" மாநிலத்திலிருந்து கொண்டு வந்து வடிக்கப்பட்டுள்ளது. இந்த லிங்கத்தின் உயரம் மட்டும் பன்னிரண்டு அடி. மூலவர் லிங்கம் மிக பெரிதாக இருக்கும் இந்திய கோவில்களில் தஞ்சை பெரிய கோவில் முதலாவதாகும்.

தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலின் சிறப்பே அதன் கலைநயம் மிக்க கட்டமைப்பும், விஞ் ஞானத்திற்கே சவால் விடும் வகையில் கோவி லின் கோபுரம் வடிவமைக்கப்பட்டிருப்பது தான். தஞ்சை கோவிலின் கோபுர நிழல் கோவிலின் மீது விழாமல் இருப்பது பழந்தமிழர்களின் விஞ் ஞான பூர்வமான கட்டுமானத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

கோவில் கோபுரத்தின் மீது வைக்கப்பட்டுள்ள பிரம்ம மந்திரகல் மட்டும் 80 டன் எடை கொண் டது. சோழர்கள், நாயக்க மற்றும் மராட்டிய மன்னர்களும் இந்த கோவிலை சீரமைத்து காட்டியிருக்கின்றனர். இந்த கோவிலின் கட்டுமானம் தமிழ் மொழியின் பெருமையை எடுத்துக்கூறும் விதத்தில் அமைந்துள்ளது.

அதாவது கோவில் கோபுரத்தின் உயரம் 216 அடி. தமிழ் உயிர்மெய் எழுத்துக்களின் எண் ணிக்கை 216

சிவலிங்கத்தின் உயரம் 12 அடி. தமிழ் உயிரெ ழுத்துக்கள் 12

சிவலிங்க பீடம் 18 அடி. தமிழ் மெய் எழுத் துக்கள் 18

சிவலிங்கத்திற்கும் நந்திக்கும் உள்ள இடை வெளி 247 அடி. தமிழில் மொத்தம் 247 எழுத்துக்கள்.

ராஜராஜ சோழன் பக்தியில் மட்டுமல்ல தமிழின்மீதும் மிகுந்த பற்று கொண்டவன் என்பதற்கு இக் கோவில் ஒரு சாட்சியாகும்.



# கார்த்திகை மாதத்தில் கண் திறக்கும் நரசிம்மபெருமாள்

பெருமாளின் நூற்றி எட்டு திவ்ய தேசங்களுள் ஒன்று ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள சோளசிம்மபுரம் எனப்படும் சோளிங்கர்.

திருக்கடிகை என்ற திருப்பெயரில் ஆழ்வார்கள் இத்தலத்து பெருமாளை குறித்து பாடியுள்ளனர்.

கடிகை என்பது ஒரு நாழிகைப் பொழுதைக் குறிக்கும். ஒரு நாழிகை இந்தத் திருத்தலத்தில் தங்கி இருந்தாலே, இத்தலம் முக்தியை அளிக்க வல்லது. அதனால் தான் திருக்கடிகை என்று இதனை ஆழ்வார்கள் அழைத்துள்ளார்கள்.

சப்த ரிஷிகளுக்கு நரசிம்ம அவதாரத்தை காண விருப்பம் ஏற்பட்டது, நரசிம்மரை எங்கு தரிசிப்பது என்ற சிந்தனையில் இருந்தபோது சோளிங்கர் மலைக்கு மேல் யோக நிலையில் நரசிம்மர் தவம் புரிவதை அறிந்து கொண்டார்கள்.

750 அடி உயரம் கொண்ட அந்த மலைக்கு மேல் சென்ற முனிவர்கள், யோகத்தில் இருக்கும் நரசிம்மர் தங்கள் முன்னே வந்து காட்சி அளிக்கவேண்டும் என்று வேண்டி ஒரு நாழிகை தவம் புரிந்தார்கள். ஒரு நாழிகை என்பது இருபத்து நான்கு நிமிடங்கள் ஆகும்.

ஆன்மிகமலர்.காம்

அந்த இருபத்து நான்கே நிமிடங்கள் செய்த தவத்துக்காக விரைவில் மனம் உகந்து, யோக நரசிம்மப்பெருமாள் அவர்களுக்குக் காட்சி அளித்தார். அந்த யோக நரசிம்மரை அங்கேயே அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள்.

இன்னொரு சுவாரஸ்யம் என்னவென்றால், வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் வாங்க விழைந்த விசுவாமித்திரர், இந்த சோளிங்கர் மலைக்கு மேல் இருப்பத்து நான்கு நிமிடங்கள் தவம் புரியவே, வசிஷ்டர் அவரைத்தேடி வந்து பிரம்மரிஷி பட்டத்தைக் கொடுத்து விட்டுச் சென்றார் என்றும் புராணச் செய்தியில் கூறப் பட்டுள்ளது.

சோளிங்கர் மலைக்கு மேல் அம்ருதவல்லித் தாயாரோடு யோக நரசிம்மராகத் திகழும் திருமால், அந்த மலையின் அடிவாரத்தில் பக்தவத் சலப் பெருமாளாகக் காட்சி அளிக்கிறார்.



மேலும் திருக்கடிகை மலைக்கு அருகிலேயே 350அடி உயரத்தில் சிறிய மலை ஒன்று உள்ளது.

அந்த மலையிலே யோக ஆஞ்சநேயர் யோகம் செய்யும் நிலையில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கிறார்.

திருக்கடிகை யோக நரசிம்மப் பெருமாளை அக்காரக்கனி என்று ஆழ்வார்கள் அழைக் கிறார்கள்.

மிக்கானை மறையாய் விரிந்த
விளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர்ப் பொலிகின்ற
பொன்மலையைத்



தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த<br>அக்காரக் கனியை அடைந்து உய்ந்து போனேனே

என்று பாடினார் திருமங்கை ஆழ்வார்.

யோகத்தில் கண்மூடி இருக்கும் நரசிம்மர், கார்த்திகை மாதத்தில் மட்டும் கண்திறந்துபார்த்து அடியார்களுக்கு அருள்புரிவதாக ஐதிகம் உள்ளது.

குறிப்பாக, கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் அந்தப் பெருமாளைத் தரிசிப்பது மிகவும் விசேஷமாகும்.

இறைவனின் திருமேனி அவயவங்களுக்குள் ஒரு போட்டி வந்ததாம்.

அவரது திருவடி, என்னிடம் தான் பக்தர்கள் சரணாகதி செய்கிறார்கள், நான்தான் பெரியவன் என்றதாம்.

திருக்கரம், நான்தான் சரண் அடைபவர்களுக்கு அபயம் அளிக்கிறேன், நானே பெரியவன் என்றதாம்.

இதுபோல் ஒவ்வொரு அவயவமும் போட்டி போட்ட நிலையில், திருமால் தீர்ப்பு தந்தாராம், என் கண்கள் கடாட்சம் புரிவதால்தான் பக்தன் வந்து சரணாகதியே செய்கிறான், எனவேகண்ணே மற்ற அவயவங்களை விட உயர்ந்தது என்று.

திருமாலே தனது கண்ணிற்கு முக்கியத்துவம் தந்து அதை முன்னிருத்தியதால், கண் திறந்திருக்கும் காலத்தில் பெருமாளை தரிசிப்பது மிகச் சிறப்பாகும்.

ஒரு நாழிகை இந்தத் திருத்தலத்தில் நாம் தங்கி இருந்தாலே இத்தலம் நமக்கு முக்தியை அளிக்க வல்லது. அந்த வகையில் கார்த்திகை மாதத்தில் கண் திறந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க காத்திருக்கும் சோளிங்கர் நரசிம்மரை இந்த கார்த்திகை மாதத்தில் நாமும் சென்று தரிசித்து முக்தி நிலை அடைவோமே...

– கீதாராஜன்
தொடர்பு எண்: 9444228203



கீதாராஜன்



ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! www.aanmeegam

## ஆன்மிக செய்திகள் சில...

# திருச்செந்தூர் முருகன்...



திருச்செந்தூரில் குன்று இல்லாததால் அங்கு இருப்பது முருகன் இல்லை என்று ஒருசிலர் வாதம் புரிவதை கேட்டிருப்போம், ஆனால் திருச்செந்தூர் கடற்பகுதியாக இருந்தாலும், அப்பகுதியில் குன்று உள்ளது, அதன்மீதுதான் முருகப்பெருமான் காட்சி தருகிறார் என்று ஆதாரத்துடன் கூறப்படுகிறது.

திருச்செந்தூர் முருகன் வீற்றிருப்பது சந்தனமலை. இந்த மலைக்கு சந்தனாசலம் என்ற பெயரும் உள்ளது. அதாவது திருச்செந்தூர் கோவிலின் மூலஸ்தானம் குடவரை. மலையைக் குடைந்து உருவாக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

www.aanmeegamalar.com



# வேலுடன் முருகன் படம்...

முருகன் படங்களை வீட்டில் வைத்து வழிபடுவது வழக்கம், அவ்வாறு முருகன் படங்களை வாங்கும்போது வேலுடன் முருகன் இருக்கும் படத்தில் முருகனைவிட வேல் உயர்ந்து காணப்படும் படங்களை வாங்குவதை தவிர்க்க வேண்டும்.

வேல் என்ற ஆயுதம் முருகனைவிட பெரிதாக இருக்கக்கூடாது, இறைனுக்கு அடங்கிதான் ஆயுதம் இருக்க வேண்டுமே ஒழிய இறைவனை மிஞ்சியதாக இருக்கக் கூடாது என்பதால் முருகனின் காது வரை வேல் உள்ளது போன்ற படங்களை வாங்கி வழிபடவேண்டும்.

# வழிபாட்டில் விலக்கு பெற்ற இரண்டு மொட்டுக்கள்



பொதுவாக மலர்களை இறைவனுக்குஅர்ப் பணிக்கும்போது மொட்டுக்களாக அர்ப்பணிக் கவோ, அர்ச்சிக்கவோ கூடாது என் பார்கள் முன்னோர்கள். பாதி மலர்ந்தும், பாதி மலராமல் இருக்கும் வகையில் அமைந்த மலர்களை இறைவனுக்கு அர்ப்பணிக்கலாம், மலராத மொட்டுக்களை உடைய பூக்களை அர்ப்பணிக்க கூடாது என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் தாமரை மற்றும் செண்பகப்பூவை மட்டும் மொட்டுக்கலாகவே இறைவனுக்கு அர்ப்பணிக்கலாம் என்று இரண்டு பூவிற்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் இரண்டு மலர்களை மட்டும் மொட்டுக்களாக இறைவனுக்கு சூட்டினாலும் எந்தவித தோஷமும் கிடையாது.

தொகுப்பு: ஷ்யாம், சென்னை.

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
145 க்கும் மேற்பட்ட
இதழ்களை




aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.

# நம்பிக்கை...

இன்றைய காலகட்டத்தில் நம்பிக்கை என்ற பதம் மக்களிடையே மிகவும் குறைந்து கொண்டே வருவதை கண்கூடாக பல்வேறு நிகழ்வுகளின் மூலம் காண்கிறோம்.

தாய், தந்தை, இறைவன், குரு, உறவு, நண்பர்கள், உடன்பிறந்தோர் மற்றும் பல்வேறு வகையினரை எந்த வித நம்பிக்கையோடும் யாரும் அணுகுவதில்லை. சுயநலம், சுகம், மேம்பட்ட வாழ்க்கை, சுக போக வாழ்க்கை போன்றவற்றால் மக்களிடையே நம்பிக்கை என்ற சொல் மெல்ல மறைந்து வருகிறது.

மக்கள்மீது நம்பிக்கையில்லாத காரணத்தால்தான் ஊரெங்கும் கண்காணிப்பு கேமிராவை நம்பி நாடி செல்கின்றனர் மக்கள்.

இது கலிகாலம், மக்கள் கலி என்றகேளிக் கையில் திளைத்திருக்கும் காலமாக இருப்பதால் ஒருவர் மற்றவர் மீது நம்பிக்கை வைக்க பயப்படுகிறார்கள், சந்தேகத்துடன் வாழப் பழகிக் கொள்கின்றனர்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

ரிக், யஜூர், அதர்வண, சாம வேதங்கள் கூறுவது இறைவனை நம்புங்கள் என்பதைத்தான், "இறைவனை நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு'' என்று இதைத்தான் நம் முன்னோர்கள் கூறினர்.

சமீபத்தில் ஒரு துணுக்கு செய்தியை படித்தேன். இதன் மூலம் இறைவன் மீது எந்த அளவிற்கு நம்பிக்கை வேண்டும் என்பதைதெளிவாக கூறு வதாக அமைந்துள்ளது... அதைப் பார்ப் போம்.

ஒருவர் திருமணமாகி தன் அழகான மனைவியுடன் கடல்வழியாக திரும்புகிறார்.

கடலில் அலைகள் ஆர்பரிக்கின்றன, இடி யும் மின்னலுமாய்இருக் கிறது.

படகு ஆடுகிறது. அவரின் மனைவி நடுங்குகிறாள்.

அமைதியாய் புன்ன கையோடு படகை செலுத் தும் கணவனை பார்த்து அவள் கேட்கிறாள்

“உங்களுக்கு பயமாக இல்லையா” என்று.

கணவன் ஒன்றுமே சொல்லாமல், தன் உறையிலிருந்து ஒரு கத்தியை எடுத்து அவள் கழுத்தில் வைக்கிறார்.

அவளோ பயப்படாமல் சிரிக்கிறாள்.

கணவன் “இக் கத்தி, பயங்கரமானது,உன்னை வெட்டிவிடும், நீயோ சிரிக்கிறாயே ?” என்று.

அதற்கு அவள் சொல்கிறாள்

"கத்தி பயங்கரமானதுதான், ஆனால் அதை வைத்திருப்பவர் என் அன்புக்குரியவர் அதனால் பயமில்லை” என்று.

கணவன் புன்முறுவலோடு

“இந்த அலைகளும், இடிகளும், மின்னல் களும், பயங்கரமானவை. ஆனால் அவற்றை தன் வசம் வைத்திருக்கும் இறைவன், என் அன்புக்குரியவன், அதனால் எனக்கு பய மில்லை” என்கிறார்.

இதுதான் நம்பிக்கையின் வெளிப்பாடு. நாம் ஒவ்வொருவரும் இறைவன் மீது இதுபோன்ற நம்பிக்கை கைக்க வேண் டும் என்பதை இந்த சிறு குறிப்பு உணர்த் துகிறது.



மாதம் தோறும் 2 புத்தகங்கள்




e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# சபரிமலை ஒரு வித்தியாசமான வழிபாட்டு ஸ்தலம்?



- உலகின் புனிதப் பயணங்களில் வருடம் தோறும் சுமார் மில்லியன் பக்தர்களை கொண்டு மெக்கா விற்கு அடுத்த படியாக அதிகம் பயணப்படுகிற இடம் சபரிமலை .
- சைவம் மற்றும் வைணவ பிரிவுகளின் ஒற்றுமை உருவமாக பார்க்கப்படுகிற புண்ணிய கோவில் சபரிமலை
- மதுரையில் இருந்து தன் சொந்த அமைச்சர்க ளால் உயிருக்கு ஆபத்து என கருதி சென்ற ராஜசேகர பாண்டியன் திருவிதாங்கூர் மன்ன னால் உதவப்பட்டு பந்தள தேசத்து மன்னனாக ஆட்சி செய்தான். அவனின் வளர்ப்பு மகனே ஸ்ரீ ஐயப்பன்.
- ராஜசேகர பாண்டியன் பம்பை நதிக்கரையில் வேட் டையாட சென்றபோது கண்டெடுத்த கடவுள் அவதாரமே குழந்தை மணிகண்டன் (ஐயப்பன்).
- 12 வயது வரை மணிகண்டன் மனித உருவமாக வளர்ந்து தன அவதார நோக்கம் முடிந்த உடன் தியானம் செய்ய சென்ற இடமே இன்றைய சபரிமலை.
- பந்தள வம்சத்தை சேர்ந்த நபர்கள் இன்றும் சபரிமலை செல்வதில்லை. தன் தந்தை ராஜசேகர பாண்டியன் சபரிமலை வந்தால் ஐயப்பன் எங்கு எழுந்துவிடுவாரோ என்று அவர் கால்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதனால் தான் அந்த ஐதீகம்









இன்றும் கடைபிடிக்கப்படுகிறது.

- பந்தள மன்னர் ராஜசேகர பாண்டியன் தன் வளர்ப்பு குழந்தை ஐயப்பனுக்காக செய்ததே திருவாபரண பெட்டி.. இதில் தங்கத்தில் சிறிய வடிவில் புலி,யானை, வாள், மாலை போன்றவை உள்ளன.. ஓலை சுவடிகளை இன்றும் காணலாம்.

- ராஜசேகர பாண்டியன் தன் மனைவி தலைவலி என்று சொல்லி புலியின் பாலை அடர்ந்த காட்டிற்குள் ஐயப்பனை கொண்டு வர சொன்னபோது இரண்டு முடிச்சுக்களில் பாது காப்பிற்கு தேவையான பொருட்களை கொடுத்து அனுப்பியதே இன்று இருமுடியாக ஐயப்ப பக்தர் கள் பின்பற்றுகின்றனர்.

- ஹரிவராஸனம் விச்வமோஹனம் என்ற புகழ்பெற்ற கே ஜே யேசுதாஸ் பாடிய பாடலே நடை அடைப்பில் ஐயப்பன் உறங்குவதற்காக இசைக்கப்படுகிறது. இந்த பாடலை எழுதியவர் கம்பங்குடி ஸ்ரீகுளத்துஐயர். இவர் பூர்வீகம் திரு நெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி

- Memoir of the survey of Travancore and Cochin states என்ற ஆங்கிலேயர் 1894 ல் எழுதிய புத்தகத்தில் சபரிமலைக்கு செல்வோர் அப்போதே ஆண்டு தோறும் 25,000 என்று குறிப்பிட்டு இருக்கிறார். அப்போதைய மக்கள்தொகை தென் இந்தியாவில் 5 கோடிக்கும் கீழ்.

- பரசுராமரால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஐயப்பன் சிலை 1950–ல் மத வெறியர்களால் தீ வைக்கப்பட்டு தீவிபத்தில் சேதம் அடைந்தது. இன்று அந்த சிலை உருக்கபட்டு கோவில் மணிய ாக கொடி மரம் அருகே காட்சி அளிக்கிறது.

- தீவிபத்தை தொடர்ந்து சிலையையார் செய்ய வேண்டும் என்ற தேவபிரசன்ன குட வோலை முறைப்படி, ஐயப்பன் சந்நிதியில் சீட்டுப் போட்டு பார்க்கப்பட்டது. அதில் மதுரை நவாப் ராஜமாணிக்கம் பிள்ளையும் பி.டி.ராஜனும் பெயர்கள் வந்தன. அவர்கள் வழங்கிய விக்கிர கத்தைத்தான் இன்றைக்கும் தரிசித்துக் கொண் டிருக்கிறோம். அந்த சிலை கும்பகோணத்தில் அடுத்த சுவாமிமலையில் தேசிய விருது பெற்ற சிற்பக்கலைஞர் ராமசாமி ஸ்தபதியால் செய்யப் பட்டது.

- கேரளாவில் கோயில்களில் பராமரிப்பு பணிகளோ, முக்கிய மாற்றங்களோ நடத்த வேண்டும் என்றால் கடவுளிடம் அனுமதி கேட்பதற்காக ‘தேவபிரசன்னம்’ என்ற பூஜை நடத்தப்படுவது வழக்கம். அதன்படியே இன்றும் சபரிமலையில் பெண்கள் அனுமதிக்கப்பட வேண்டுமெனில் தேவபிரசன்னம் செய்யப்பட்டு கடவுளின் அனுமதி பெற வேண்டும் என்பது கோவில் நிர்வாகத்தின் முடிவு.

- காமாக்யா கோயில் (குவஹாத்தி, அசாம்), கார்திகேயா கோயில் (பெஹோவா, ஹரியானா மற்றும் புஷ்கர், ராஜஸ்தான்) ஹாஜி அலி தர்கா (மும்பை, மகாராஷ்டிரா) மங்கள் சண்டி கோயில்,



(பொகாரோ, ஜார்கண்ட்) ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயில் (மலைகீழு, கேரளா) பட்பௌசி சத்ரா (பார்பெட்டா, அசாம்) ஜெயின் கோவில் (ரணக்பூர், ராஜஸ்தான்) போன்ற கோவில்களை போல சபரிமலையும் குறிப்பிட்ட வயதுப் பெண்களை அனுமதிப்பதில்லை .

● ஐயப்பனை சாஸ்தாவாக வழிபடும் முறை தமிழகத்தில் இருப்பதே. முக்கியமாக தென் மாவட்டங்களில் அய்யனார் வழிபாடு மிக பிரபலம். அதில் ஆதி சாஸ்தாவாக காட்சி அளிக்கும் இடமே சொரிமுத்து அய்யனார் கோவில் பாபநாசம்,

● விரத முறையில் உணவை உண்டு அன்ன தானம் செய்ய வேண்டும் என்பது சபரிமலை யாத்திரையில் மட்டுமே. மற்ற முறைகளில் விரதம் என்றால் உணவை உட்கொள்ளாமல் இருப்பது.

● ஏழை, பணக்காரர், சாதி மதம், உயர் அதிகாரி, பாமரன், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என பாகுபாடு அன்றி அனைவரையும் சாமியாக பார்ப்பதே சபரிமலையின் தனிச்சிறப்பு.

● 41 நாட்கள் விரதம் இருக்கும் முறை சபரி மலை யாத்திரையில் மட்டுமே காணப்பட கூடிய ஒன்று. வேறு எந்த கோவிலிலும் காண முடியாத கடுமையான விரத முறை.

● அடர்ந்த காட்டிற்குள் வன விலங்குகள் தாக்கும் அபாயத்திற்கு மத்தியில் நடைபயனமாக புனிதமான பெருவழிப்பாதை 60 கிலோ மீட்டர் செல்வது சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு மட்டுமே

● மணிகண்டன் கல்வியை குருவிடம் தான் பயில வேண்டும் என்று ஆசைப்பட்ட ராஜசேகர பாண்டியனின் ஆசையே இன்று குரு தத்துவமாக குருசாமியாக ஐயப்ப யாத்திரையில் இருக்கிற வழக்கம்.. தன்னை காண வேணுமெனில் குரு மூலமாகத் தான் வர வேண்டும் என்று ஆசைப்பட்டவர் ஐயப்பன்

● மற்ற கோவில்களை போல் தினமும் அல்லாமல் ஆண்டில் வெறும் 120 நாட்களுக்கும் குறைவாக நடை திறந்து இருக்கும் கோவில் சபரிமலையே

● சபரிமலை யாத்திரையை தமிழக மக்களி டையே மிகவும் பிரபல படுத்தியவர் நவாப் ராஜ ணிக்கம் பிள்ளை... அவருடைய சிஷ்யர் எம் என் நம்பியார் மகா குருசாமி.

ஐயப்பா பாடல்கள் மூலம் பிரபலபடுத்தியவர்கள் வீரமணி சோமு மற்றும் அவர் தம்பி கே வீரமணி.



இன்றும் பல கோவில்கள் மற்றும் வீடுகளிலும் கேட்டுக் கொண்டிருக்கின்றோம் "பள்ளிக்கட்டு சபரிமலைக்கு" பாடல்

● இன்று போல் அடர்ந்த காட்டில் சாலை, ஹோட்டல்கள் இல்லாத காலத்தில் தமிழக பக்தர்களுக்காக உணவும் பேருந்து வசதியையும் ஏற்படுத்தி குருவாக இருந்தவர் நாகர்கோவிலை பூர்வீகமாக கொண்ட புனலூர் தாத்தா சுப்ரமணிய அய்யர்.

● ஐயப்ப பக்தர்கள் எருமேலியில் இருக்கும் வாபரணனை வணங்கி காட்டுவாசி போன்ற வேடமிட்டு அவரிடம் உத்தரவு பெற்ற பின்பே பெருவழியில் நுழைகின்றனர். இயற்கைக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்ற தத்துவம் இது.

● சபரிமலைக்கு மற்ற கோவில்களை போல் குறிப்பிட்ட வருடங்களுக்கு பிறகு கும்பாபிஷேகம் செய்கிற வழக்கம் இல்லை. ஆண்டுதோறும் வரும் பக்தர்களின் பக்தியாலும் அதன் சக்தி குறையாமல் ஒவ்வொரு வருடமும் அதன் சைதன்யம் கூடிக்கொண்டே செல்வதாக நம்பப்படுகிறது.

● பரசுராமர் உருவாக்கிய சிறிய ஆலயத்தை மாற்றி அமைத்து பதினெட்டுபடிகளோடு உருவாக்கியவர் பந்தள அரசர் ராஜசேகர பாண்டியன்.

● சபரிமலையை தவிர மற்ற கோயில்களில் சாஸ்தாவை வீராசனத்தில் காணலாம். அதன்படி, சாஸ்தாவின் ஒரு கால் நிலத்திலும், மறு கால் மடித்தபடியும் இருக்கும். மடித்த காலையும் இடுப்பையும் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் பட்டம் வீரப்பட்டம் எனப்படும்.

● சபரிமலையில் மாளிகைபுறத்து அம்மன் சன்னதி என்பது ஐயப்பன் வதம் செய்த பெண் மகிஷியின் தூய்மை வடிவமே. வதம் செய்த பிறகு ஐயப்பன் தன்னை மணந்து கொள்ள விருப்பம் சொன்ன போது “என் அருகிலேயே நீ இருக்கலாம் என்றும் எப்போது என்னை ஒரு கன்னிசாமியாவது வராமல் இருக்கிறாரோ அன்று உன்னை மணந்து கொள்கிறேன்” என்று கூறியவன் பிரம்மச்சர்யம் கொண்ட ஐயப்பன்..

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# வாபரனணை வாபராக மாற்றி சதி

# ஸ்ரீஐயப்பன் புராணத்தில் ஒரு இடைச் செருகல்

வேதங்கள், புராணங்கள், இதிகாசங்களில் அதிகப்படியான இடைச்செருகலையும், கடவுளின் வடிவங்களை மாற்றும் கூட்டங்களும் அதிகம் வாழ்வது தமிழகத்தில்தான் என்பது அனைவருக்கும் தெரியும்.

புராண காலத்திலேயே கடவுளை மறுக்கும் அரக்கர் கூட்டம் வாழ்ந்திருக்கிறார்கள், இறைவனை வணங்கி வரங்களை பெற்றவர்கள், தங்களின் அதீத சக்திக்கு ஈடு இல்லை என்ற மமதை தோன்றி, மற்றவர்களை கொடுமை செய்து அரக்கர்களாக மாறி, இறைவனுக்கே சவால் விட்டு, பின் இறை அவதாரத்தால் அழிந்த கதைகளைபுராணங்கள் வாயிலாக அறிந்திருக்கிறோம்.

புராண காலம் முடிவடைந்து, இந்த கலியுகத்தில் அந்த அரக்கர்கள் கூட்டமும் நவீனத்துவம் அடைந்துள்ளது. கலியுகத்தில், இந்து மதக் கடவுள்களை மறுக்கும் கூட்டமாகவும், புராணங்களை திரித்து கூறும் கூட்டமாகவும், இந்து மதத்தை இழிவுபடுத்தும் கூட்டமாகவும் நவீனத்துவமான வகையில் அரக்கர்கள் உருமாறியிருக்கிறார்கள்.

அரசியல் ஆதாயம், சுகபோக வாழ்க்கை, போன்றவற்றிற்கு அடிமையாகி, இந்து மதத்தையும், இந்துமதக் கடவுள்களை மட்டும் எதிர்க்கும் அரக்கர்கள் கூட்டம் தமிழகத்தில் மட்டுமல்ல உலக அளவில் அதிகரித்துள்ளனர்.

இந்து மத புராணங்களில் இடைச்செருகலையும், இந்து கடவுள்களை வேறு வடிவத்திற்கு மாற்றியும், இந்து புராண கருத்துக்களை திரித்து கூறி சொகுசான வாழ்க்கை வாழும் கூட்டம் அதிகம் இருப்பது தமிழகத்தில்தான் என்று அனைவருக்கும் தெரியும்.





பேட்டை சாஸ்தா



எரிமேலி

திருவள்ளுவர், ஔவையார், தொல்காப்பியம், கம்பர் போன்றவர்களின் நெற்றிப் பட்டையையும், ருத்ராட்ச கொட்டையையும் மாற்றி வடிவமைக்கும் அரக்கர்கள் கூட்டத்தையும் நாம் பார்த்திருக்கிறோம்.

இதில் ஒரு படி மேலே சென்று இந்து மதத்துடன் மாற்று மதத்தையும் இணைத்து ஒரு மாபெரும் மோசடியில் இறங்கியுள்ள கூட்டத்தின் சதிகாரச் செயலைப் பற்றி நாம் அறிந்து கொள்வோம். சபரிமலை ஐயப்பன் புராணத்தில் மாபெரும் திரித்தலை கூறி பல ஆயிரம் கோடியை அனுபவிக்கிறது ஒருகூட்டம்.

அந்தவகையில் சபரிமலை ஐயப்பன் புராணக் கதையில் வாவர் என்பவர் இடைச் செருகளாக சேர்க்கப்பட்டதாக பல்வேறு ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதைப்பற்றி விரிவாக பார்ப்போம்...

சபரிமலை செல்பவர்கள் முதலில்பேட்டை சாஸ்தாவை வணங்கி விட்டுத்தான், ஐயப்பனை தரிசிக்கவேண்டும் என்று ஐயப்பன் புராணம் கூறுகிறது.

பேட்டை சாஸ்தா என்பவர் வாபர சுவாமி என்ற பூத கணங்களின் தலைவர் ஆவார்.

சுவாமி ஐயப்பன் ராணியின் சூழ்ச்சியால் புலிப்பால் கொண்டு வருவதற்கு புறப்பட்டார்.

வனத்தின் எல்லையாகிய எருமேலியில் சிவ பெருமான் அனுப்பிய பூதகணங்கள் வாபரன் என்ற பூதகணத்தலைவனின் தலைமையில் ஸ்ரீ ஐயப்பனை சந்தித்து வணங்கி நின்றனர்.

ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு மகிஷி சம்ஹாரம் செய்ய அவர்கள் உதவியாக நின்றனர்.

பின் ஐயப்பன் புலிக்கூட்டங்களுடன் பந்தளம் திரும்பினார். பூதகணங்கள் வனத்தின் எல்லை வரை உடன் வந்து வழியனுப்பினர்.

அப்போது ஸ்ரீ ஐயப்பன் வாபரனை அழைத்து, வனத்தின் எல்லையான எருமேலியில் தங்கி இருக்குமாறும் தன்னை தரிசிக்க காடு வழியாக சபரிமலை வரும் பக்தர்களை கொடிய வனவிலங்குகளிலிருந்து காத்து வருமாறும் கட்டளையிட்டார்.

புலிக்கூட்டங்களுடன் பந்தளம் திரும்பிய ஐயப்பன் பந்தளமன்னனுக்கு ஆன்மீக உபதேசம் அருளினார்.

தமக்கும்(தர்மசாஸ்தா) வாபரனுக்கும் (பேட்டை சாஸ்தா) வித்தியாசம் இல்லை என்று கூறினார்.

எருமேலியில் வாபரனுக்கு ஒரு கோயில் அமைக்குமாறும் பணித்தார்.

பின் ஒரு அம்பு எய்தார் அந்த அம்பு விழுந்த இடத்தில் தனக்கு பதினெட்டு தத்துவ படிகளுள்ள ஒருகோவில் கட்டுமாறு கட்டளையிட்டுவிட்டு மறைந்தார்.

அதன்படி பந்தள மன்னன் பரிவாரங்களுடன் புறப்பட்டுச்சென்றார். அப்போது வாபரன் மன்னனை சந்தித்து அவரை பொன்னம்பல மேட்டிற்கு


ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளத்தில் ஆன்மிக செய்திகளை படிக்க அருகே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்து
Scan to Read- aanmeegamalar Website
அற்புதமான ஆன்மிக செய்திகளை படித்து மகிழுங்கள்

## இந்தியாவில் கிபி.610க்கு (கிறிஸ்துவுக்கு) பின்பு தான் இஸ்லாமியர்கள் ஊடுருவியதாக வரலாறு கூறுகிறது. ஆனால் ஐயப்பன் சரித்திரம் கிமு.விற்கு (கிறிஸ்துவுக்கு) முன் நடைபெற்றதாக கூறப்படுகிறது. அப்படி இருக்கும்போது இந்தியாவிற்குள் வாபர் என்ற இஸ்லாமியர் எப்படி ஐயப்பனின் தோழனாக முடியும்.



கூட்டிச்சென்று தர்ம சாஸ்தாவிடம் சேர்த்தார்.

மன்னன் ஐயப்பனிடம் உபதேசம் பெற்றார்.

மன்னனுக்கு மனதில் இருந்த எஞ்சியிருந்த சந்தேகங்களும் தீர்ந்து தெளிவுபெற்றார் பந்தள மன்னன்.

ஸ்ரீ ஐயப்பனின் கட்டளையின்படியும் அகத்திய முனிவரின் உபதேசங்களின்படியும் முதலில் எருமேலியில் வாபரனுக்கும், பின் சபரிமலையில் ஸ்ரீ ஐயப்பனுக்கும் மஞ்சள்மாதாவிற்கும் கோயில் கள் அமைத்து பிரதிஷ்டை செய்து உற்சவமும் நடத்தினார்.

எருமேலியில் அமைக்கப்பட்டுள்ள கோயில் பேட்டை சாஸ்தா கோவில் என்றழைக்கப்படுகிறது.

பேட்டை சாஸ்தா என்பது வாபர ஸ்வாமி என்ற பூதத்தலைவன் ஆவார்.

அன்று முதல் தன்னை வணங்கி பேட்டை துள்ளி காடு வழியாக சபரிமலை செல்லும் பக்தர் களை வனவிலங்குகளிடமிருந்து காப்பாற்றி கானகம் கடக்க துணை செய்து வருகிறார் வாபரஸ்வாமி.

புராணப்படி நடைபெற்ற நிகழ்வு இது தான்.

ஆனால் காலமாற்றத்தில் ஒருசில இடைச் செறுகல்கள் சேர்ந்து வாபரன் என்ற பேட்டை சாஸ்தாவை புறக்கணித்து வாவர் என்ற பொய் கதையை பரப்பிவிட்டுவிட்டனர்.

**நமது பாரதநாடு பல நூற்றாண்டு காலம் கொள்ளைக் கூட்டங்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. அக்காலத் தில் நம்நாட்டு மன்னர்கள் பல்வேறு நிர்பந்தங்களுக்கு பணிந்து கொடுக்க நேர்ந்தது அவ்விதமான ஏதோ ஒரு நிர் பந்தத்துக்கு ஆளாகிய அக்கால பந்தள மன்னன் ஒருவர், அமீர்காதி செய்னுதீன் பஹதூர் பாவா பாவர் முசலியார் என்ற முஸ்லீம் குடும்பத்திற்கு எருமேலியிலும் பதி னெட்டாம்படியிலும் பள்ளி வாசல் அமைத்து ஐயப்ப பக்தர்களிடம் நிதி வசூல் செய்துகொள்ள அனுமதித்து செப்பு பட்டயம் வழங்கினார்.**

எருமேலி பள்ளிவாசலில் சமாதி வைக்கப் பட்டுள்ள இஸ்லாமியரின் பெயர் பாபர் என்றும் பெதருதீன் என்றும் சிக்கந்தர்ஷா என்றும் அலி யார்தங்ஙள் என்றும் பலகருத்துக்கள் உள்ளன.

பள்ளிவாசல்களை அமைத்துக்கொண்டபின் ஐயப்ப பக்தர்களிடையே வாவர் என்ற கதை பரப்பினார்கள். ஸ்ரீ ஐயப்பஸ்வாமி வாவர் என்ற கொள்ளையனை வென்று தோழனாக்கிக் கொண்ட தாகவும் வாவர்சமாதியில் வணங்கி விட்டுத்தான் சபரிமலைக்கு செல்ல வேண்டும் என்றும் கதைகட்டினார்கள்.

**வாபர சுவாமிதான் பேட்டைசாஸ்தா என்பதை மறைத்துவிட்டு, அவரை வழக்கிலிருந்தே பக்தர்கள் மனதிலி ருந்து மறக்கவைக்கப்பட்டார்.**

**வாபர சுவாமிக்கு பதில் வாவர் சமாதியை கும்பிட ஆரம்பித்தார்கள்.**

ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமிபற்றிய மூலநூல் பூத நாதோபாக் யானம் என்ற சமஸ்கிருத நூல் ஆகும் இது பிரம்மாண்ட புராணத்தில் உட்பட்டது ஆகும். மலையாளத்தில் இதன் மொழிபெயர்ப்பு கல்லறயிக்கல் கிருஷ்ணன் கர்த்தா அவர்களால் 1928–இல் வெளியானது.

இந்நூலின் பெயர் பூதநாதோபாக்யானம்(கிளிப் பாட்டு) என்பதாகும். முதல் மலையாளநூல் இது.



இரண்டாவதாக மூலநூலைத்தழுவி உரை நடையில் மலையாள மொழியில் பி.என்.கிரிஷ் ணுண்ணி என்பவர் 1938–இல் ஸ்ரீ பூதநாதன் என்ற நூலை வெளியிட்டார்.

மேற்கூறிய நூல்களில் வாபர சுவாமியைப்பற்றி கூறப்பட்டுள்ளது. வாவரைப் பற்றி எந்தச் செய்தியும் இல்லை

1946–இல் வித்துவான் குறுமள்ளூர் நாராயண பிள்ளை என்பவர் மலையாள மொழியில் பூதநாத சர்வஸ்வம் என்ற நூலை வெளியிட்டார்.

மேலும் 1984–ல் ஆசிரமம் தாமோதரன் என்பவர் வெளியிட்ட ஐயப்ப சர்வஸ்வம் என்ற மலையாள நூல் 1988–ல் ஆஸ்திக மணி கி.சுப்பிரமணிய அய்யர் வெளியிட்ட ஐயப்பன் பெருமை என்ற தமிழ் நூல் முதலிய பல நூல்களை பரிசோதித்ததில் வாவர் பற்றிய கதை ஒரு இடைச்செருகல் என்பது தெளிவாகிறது.

1938–க்கும் 1946–க்கும் இடையில் சூர்ப்பன் கவி, பாண்டிச்சேவம், பந்தளச்சேவம், இளவர் சேவம், பாலாழிமதனம், ஈழச்சேவம், வாவரங்கம் என்னும் பெயர்களில் மலையாளமொழியில் பல சாஸ்தாப் பாடல்கள் பாடப்பட்டன. இதைப்படிக்கும் ஐயப்ப பக்தர்கள் பேட்டைசாஸ்தா என்ற வாபரஸ்வாமி யை அவசியம் வழிபட வேண்டும்.

இல்லாத ஒரு விஷயத்தை ஐயப்ப பக்தர்களிடம் பரப்பி, 41 நாட்கள் விரதம் இருந்து கல்லறைக்கு சென்று தங்கள் விரதத்தின் புனிதத்தை கெடுத்துக் கொண்டு சபரிமலை ஐயப்பனை தரிசித்தால் பலன் கிடைக்குமா? ஒவ்வொரு ஐயப்ப பக்தர்களும் சிந்திக்க வேண்டிய தரும் இது.

இந்தியாவில் (கிறிஸ்துவுக்கு பின்) கிபி.610க்குப் பின்புதான் இஸ்லாமியர்கள் ஊடுருவியதாக வரலாறு கூறுகிறது. ஆனால் ஐயப்பன் சரித்திரம் (கிறிஸ்துவுக்கு முன்) கிமு.விற்கு முன் நடைபெற்றதாக கூறப்படுகிறது. அப்படி இருக்கும்போது இந்தியாவிற்குள் வாபர் என்ற இஸ்லாமியர் எப்படி ஐயப்பனின் தோழனாக முடியும்.

மாலை அணிந்து, 41 நாட்கள் விரதமிருந்து, சுக துக்கங்களை இழந்து, தெரிந்த உறவினர் மரணம் ஏற்பட்டால்கூட இறப்பில் கலந்து கொள்ளாமல், அடர்ந்த பனிகாலத்திலும், இரண்டு வேளை குளித்து, காலிற்கு செருப்பு கூட அணியாமல் கடுமையாக விரதமிருந்து, காடு மலைகளை கடினமாக கடந்து ஐயப்பனை காணச் செல்லும்போது, இடைச்செருகலுக்கு ஏன் முக்கியத்துவம் தரவேண்டும். இடைச்செருகலுக்கு முக்கியத்துவம் தந்து நமது விரத முறைகளுக்கு கலங்கம் ஏற்படுத்தலாமா, ஒவ்வொரு ஐயப்ப பக்தர்களும் சிந்தியுங்கள், எம்மதமும் சம்மதம் என்பது நியாயமான வாதமாக இருந்தாலும், இல்லாததை ஏற்பது என்பது தேவையா?

– நடராஜன், காஞ்சிபுரம்
போன்: 9444228203



# 2022 நவம்பர்

(16–11–22 முதல் 30–11–22 வரை)

## மேஷம் முதல் மீனம் வரை

# 12 ராசிகளுக்கான பலன்கள்

ஒருவரது தசா புத்தியே 70–75% வரையிலும், கோட்சாரம் 25–30% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும். ராசி, லக்கினம் இரண்டில் எது வலுவாக உள்ளதோ அதை பொறுத்தே பலன்கள் அமையும். பலன்களை ராசிப்படியும், லக்கினத்தையும் ராசியாக பாவித்தும் ஒப்பிட்டுப்பார்த்து நடைமுறையில் பொருந்தும் பலன்களை அறிந்து கொள்ளவும்.



ஜோதிட ஆலோசனைக்கு:
ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர், கிருஷ்ணகிரி.
கி.கார்த்திகேயன்.
செல்: 7010909413.

## மேஷம்:



படபடப்பு, பதட்டம் இருக்கும். குழப்ப நிலையில் இருப்பீர்கள். இனம் புரியாத கவலைகள் வந்து போகும். நிறைவேற்ற வேண்டிய பிரார்த்தனையைநினைவுபடுத்தும்விதமான கனவுகள் வரலாம். பெரிய திட்டம் போடுவீர்கள் எனினும் செயல்படுத்துவதில் தடை, தாமதம் நீடிக்கும். தொழில், வேலையில் டென்ஷன் இருக்கும். கடுமையாக வாக்குவாதங்கள், கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. தொழிலாளர்கள், பணியாளர்கள் நிலை சீராக செல்லும். பத்திரிக்கை, மீடியா துறையை சேர்ந்தவர்கள் ஆதாயம் அடைவர். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.சகோதரியால் உதவி, ஆதாயம் உண்டு. சகோதரவழியில் சிறு சிறு சங்கடங்கள் வரலாம். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக பயணங்கள் உண்டாகும். படிப்பு சம்பந்தப்பட்ட செலவுகள் உண்டாகும். அரசு வழி காரியங்கள் ஆதாயமாக முடியும். சொத்து, வீடு சம்பந்தப்பட்ட வகையில் சுப விரயம் உண்டாகும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட விவகாரங்களால் சிலர் அசௌகரியமான சூழலை சந்திப்பார்கள். பிள்ளைகள் படிப்பில் மந்த நிலை நீடிக்கும். கல்லூரியில் பயில்வோர் பொறுமையாக நடந்துகொள்ள வேண்டும். கலை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையில் பணிக்கு முயற்சிப்பவர்களுக்கு தகுந்த வேலை கிடைக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. துணைவர் பணிக்கு செல்பவரானால் ஆதாயம் காண்பர். மூத்த சகோதர வழியில் அனுகூலம் உண்டாகும். குலதெய்வ பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரிகள், கலைத்துறையினர், அரசியல்வாதிகள் ஆதாயம், இலாபம் அடைவர். 19, 20 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 27, 28 தேதிகள் புதிய திட்டங்களுக்கு உகந்தது.

## ரிஷபம்:



மனமகிழ்ச்சி உற்சாகம் கூடும். ஆடம்பர அலங்கார பொருட்களின் சேர்க்கை உண்டு. ஆன்மீக ஈடுபாடு, சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். மாணவர்கள் சுறுசுறுப்பாக காணப்படுவார்கள். தாய் மற்றும் தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். சுற்றுலா மற்றும் கலைத்துறை, ஜவுளி, நகை கடை நடத்துபவர்கள் அதில் பணியாற்றும் ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆதாயம் அடைவர். பேச்சில் இனிமை கூடும். குடும்ப நிலவரம் சீராக செல்லும். அத்தியாவசிய அல்லது பிள்ளைகளின் எதிர்கால தேவைக்காக கடன்கள் உண்டாகும். திட்டமிட்ட சிறுதூர பயணங்கள் தள்ளிப்போகும். பெரியோரின் அறிவுரையின் பேரில், துணிந்து சில காரியங்களை செயல்படுத்தி வெற்றி காண்பீர்கள்.

வீடு, மனை, நிலம் வாங்கும் வாய்ப் புகள் கூடி வரும். வண்டி வாகன வகையில் செலவுகள் உண்டாகும். தாயாரின் உடல் நிலை மேம்படும். உழைப்பு கூடும், இளைய சகோதர உறவு, மேலதிகாரிகள் வகைகளில், சில மனக்கசப்புகள் உண்டாகலாம். பூர்வீக சொத்துக்கள் சிலருக்கு கிடைக்கும். வயிற்று பகுதி சம்பந்தப்பட்ட இடங்களில் சிலருக்கு உடல் உபாதைகள் ஏற்படலாம். நாள்பட்ட கை, கால் சம்பந்தப்பட்ட தொந்தரவுகள் சீராகும்.

தொழில் கூட்டாளிகள், துணைவர் வழியில் தனலாபம் உண்டாகும். திடீர் ஆடம்பர பொருட் களின் சேர்க்கை உண்டாகும். துணைவர் பணிக்கு செல்பவராயின் ஆதாயம் உண்டு. துணைவர் சீருடை பணியாளராயின் பதவி, ஊதிய உயர்வு கிடைக்க பெறுவார். துணைவர் வழி இளைய சகோதரத்திற்கு முன்னேற்றம், வேலை வாய்ப்பு உண்டாகும். மாமியார், மாமனார் வழி உதவிகள், ஆதரவு சிறப்பாக இருக்கும். அரசியல், அரசு துறை சார்ந்தவர்களுக்கு நிலைமை சீராக இருக்கும். 19, 20 தேதிகளில் புதிய முயற்சிகள் நன்மையளிக்கும். 22, 23 தேதிகளை தவிர்க்கவும்.

## மிதுனம்:



உடல் மன நிலை சிறப்பாக இருக்கும். சுப செலவுகள் உண் டாகும். நவநாகரீக ஆடை ஆபரண பொருட்களின் சேர்க்கை உண்டாகும். தெய் வீக வழிபாடுகளில் ஆர்வம் உண்டாகும். பிரயாணங்களால் அலைச்சல் உண்டாகும். உஷ்ண சம்பந்த தொந்தரவுகள் வந்து போகும். சுப செய்திகள் வந்து சேரும். தகவல் தொடர்பு சிறப்புறும். பெரியோரிகளிடம் விட்டுக்கொடுத்து பொறுமையாக செயல்பட வேண்டும். சகோதரி, மகள் சம்பந்தமாக சுப செலவுகள் உண்டாகும். துணையின் வழி ஆதாயம் உண்டாகும். வாக்கில் இனிமை கூடும், தனவரவு சிறப்பாக இருக்கும் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். பணியாளர், தொழிலாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சகோதர உறவுகளின் சந்திப்பு, சிறு பயணங்கள் உண்டு. சகோதர் வழியில் பணிக்கு முயற்சி செய்பவராயின் உரிய வேலை கிடைக்கும். சொத்து, நிலம், வீடு, வாகன வகையில் செலவுகள் உண்டாகும். சுப செலவுகளுக்கான கடன்கள் ஏற்புடும். தாய்வழி உறவுகள் சம்பந்தப்பட்ட அனுகூலமற்ற செய்திகள் கேள்விப்படுவீர்கள். தாய்மாமன், தந்தை வழி தாத்தா வகைகளில் தன வரவு உண்டாகும். மனைவி, அல்லது கணவர் பணியாளர் எனில், அதிகார பதவிகள், பதவி உயர்வு, மதிப்பு உயரப்பெறுவர். துணையின் சகோ தர உறவுகளுக்கு வேலை, திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். ஜாதகருக்கு வேலை பளு அதிகரிக்கும். புதிய திட்டங்கள் இழுபறியாக இருக்கும். சிறிது காலம் தாமதப்படுத்துவது நல்லது. நல்ல நிம்மதியான தூக்கம் இருக்கும். வயதில் மூத்த குடும்ப உறுப்பினர்கள் எதிர்பாராத விதமாக உடல்நல கோளாறுகளிலிருந்து விடுபட்டு சுகமடைவர். குலதெய்வ வழிபாடு, ஆஞ்சநேயர் வழிபாடு நலம் பயக்கும். 23, 24 தேதிகள் புதிய காரியங்களுக்கு உகந்தது. 27, 28 தேதிகளை தவிர்க்கவும்.

## கடகம்:



ஆரோக்கியம், உடல்நிலை மனநிலை சீராக இருக்கும். தொழில், வேலை சீராக செல்லும். தனவரவு நிதி நிலை சிறப்பாக இருக்கும். வர வேண்டிய கடன்கள் வசூலாகும். நீண்டகால முதலீடுகள் முதிர்ச்சியடைந்துபலன்கள் கைக்கு வரத்தொடங்கும். புதிய பொருட்களின் சேர்க்கை உண்டாகும். மதிப்பு, மரியாதை அதி கரிக்கும். பணியாளர்கள், தொழிலாளர்கள் நன்மை அடைவர். பயணங்களில் கவனம் தேவை. சிலருக்கு வீண் விரையங்கள் ஏற்படலாம். விநாயகர் வழிபாடு நன்மை பயக்கும். சுக சௌகரியங்கள் சம்பந்தப்பட்ட வகையில் அலைச்சல் உண்டாகும். குடும்பம் அல்லது தாயார் சம்பந்தப்பட்ட தேவை களுக்காக கடன்கள் உண்டாகும். மூத்த சகோதரத் திற்கு மருத்துவ செலவுகள் உண்டாகும். தர்ம காரியங்களுக்கு செலவுகள் செய்வீர்கள். குல தெய்வ வழிபாடு, சித்தர் ஜீவ சமாதி வழிபாடுகள் செய்வீர்கள். வியாபாரிகள், முதலாளிகள் புதிய இயந்திரம், வாகனங்களை தொழில் விருத்திக் காக வாங்குவார்கள். தொழிலாளர்கள் மூலம் வியாபாரிகளுக்கு ஆதாயம் உண்டாகும். எதிரிகள் பணிந்து செல்வார்கள். வழக்கு விவகாரங்கள் சாதகமாக முடியும். எதிர்பாராத வெற்றி கிடைக்கும். தாய்வழி உறவுகளின் ஆதரவு கிடைக்கும். சீருடை பணியாளர்கள், காவல் துறைகளை சார்ந்தவர்களுக்கு எதிர்பா ராத இலாபம் உண்டு. துணைவர் பணிக்கு செல்ப வரானால் அலைச்சல், வேலைப்பளு உண்டாகும். சில சங்கடங்களை சந்திப்பார்கள். பத்திரிகை, தகவல் தொடர்பு சம்பந்தப்பட்ட துறையில் உள்ளவர்கள் நன்மை அடைவர். சில நீண்டகால விருப்பங்களுக்காக அலைச்சல் உண்டாகும். தேவைகளுக்காக நகை அடகு வைப்பீர்கள். அரசியல் சார்ந்தவர்கள் சங்கடங் களை சந்திப்பார்கள். 25, 26 தேதிகள் புதிய முயற்சிகளுக்கு உகந்தவை. 28, 29 தேதிகளை தவிர்க்கவும்.

## சிம்மம்:



சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். இளைய சகோதரத்துடன் மனக்கசப்பு உண்டாகும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. அரசு சார்ந்த காரியங்கள் தாமதமாகும். புதிய திட்டங்களை ஒரு மாத காலத்திற்கு தள்ளிப்போடவும். குடும்ப தேவைகளுக்காக நகை அடமானம் வைத்து பணம் புரட்டுவீர்கள். தொழில், பணி நிலை சீராக செல்லும். மனைவி, மக்கள் வழியில் செலவுகள் கூடும். வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கும்.

கோயில் வழிபாடு, சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சுப செலவுகள் உண்டாகும். இளைய சகோதரர்கள் நிலை உயரும். சீருடை பணியாளர்கள் ஆதாயம் அடைவர். பிள்ளைகள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள். அவர்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும், எதிர்பார்க்கும் சுப செய்திகள் வந்து சேரும். நவ நாகரீக பொருட்களின் சேர்க்கை உண்டாகும். காவல், ராணுவம், சீருடை பணி மற்றும் போட்டி தேர்வு எழுதிவிட்டு முடிவுகளுக்காக காத்திருப்போருக்கு எதிர்பார்க்கும் நல்ல முடிவு வரும். பயணங்களில்நிதானம், பொறுமையை கடைபிடிக்கவும். தாய் மாமன் வழியில் உதவிகள் உண்டாகும். கணவன் மனைவி இடையே சிறு சங்கடங்கள் உண்டாகலாம். வேலை பளு அதிகரித்த போதிலும் தன வரவுக்கு குறைவிருக்காது. மீடியா, பத்திரிக்கை துறையை சேர்ந்தவர்களுக்கு அனுகூலமான நிலை நீடிக்கும் ஆயினும் படபடப்பு, அலைச்சல் இருக்கும். தூக்கம் குறையலாம், நவகிரக வழிபாடு, துர்க்கை அம்மன் வழிபாடு பலனளிக்கும். அலைச்சல் உண்டாகும். 18, 19 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 20, 21 தேதிகள் புதிய திட்டங்களுக்கு உகந்தவை.

## கன்னி:



பொருள் விரையம்,எதிர் பாராத செலவுகள்ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். படபடப்பு, பதட்டம் அதிகரிக்கும். கூடுமானவரை பொறுமை, நிதானம் இழக்காமல் இருக்க வேண்டும். தியானம் செய்யவும். ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. வயிற்றுப்பதிகளில் தொந்தரவுகள் உண்டாகும். சுப நிகழ்ச்சிகளுக்கானபயணங்கள் சிலருக்கு உண்டாகலாம். சுபகாரியத்திற்காக கடன் உண்டாகும். பணியா ளர்கள், தொழிலாளர்கள் உற்சாகமாக காணப்படுவர். வியாபாரிகள் நிலை மேம்படும். எதிர் பாராத பொருள் சேர்க்கை உண்டாகும். சீருடைப்பணியாளர்கள், காவல், ராணுவம், தீயணைப்புத்துறையை சேர்ந்தவர்கள் ஆதாயம் காண்பர். தாயாரின் ஆரோக்கியம் மேம்படும். தனவரவு சீராக இருக்கும். சகோதரர் வழியில் சுப நிகழ்ச்சிகள் உண்டாகும். உறவு வலுப்படும். வீடு, வாகனம், நிலபுலன் வகையில் சில செலவுகள் உண்டாகும். பிள்ளைகளால் சில செலவுகள் ஏற்படும். துணைவர் பணிக்கு செல்பவராயின் பணிச்சுமை கூடும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சுறுசுறுப்பாக செயல்படுவார்.

நீண்டகால முதலீடுகளை சிறிது காலத்திற்கு தவிர்க்கவும். பூர்வீக சொத்து, நிலம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் சாதகமாக முடியும். எழுத்து, மீடியா, செய்தி துறைகளை சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் நடைபெறும். அலுவலகத்தில் கடன் வாங்குவீர்கள். சொத்து, நிலம், நீண்டகால முதலீடுகளை விற்று பணமாக்குவீர்கள். விஷ்ணுவின் அவதார பெயர்கள் நகைக்கடன் அல்லது நீண்டகால கடன்கள் சிலருக்கு உண்டாகும். தூக்கம் குறையலாம், நவகிரக வழிபாடு, துர்க்கை அம்மன் வழிபாடு பலனளிக்கும். அலைச்சல் உண்டாகும். 20, 21 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 22, 23 தேதிகள் புதிய திட்டங்களுக்கு உகந்தவை.

## துலாம்:



குடும்ப சூழ்நிலை சீராக செல்லும். மனமகிழ்ச்சி கூடும், தொழில் வகையில் பொறுப்பு, வேலைப்பளு அதிகரிக்கும். வீட்டில் சில பழுதுபார்ப்பு, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வீர்கள். பிள்ளைகளால் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். சுறுசுறுப்புக்காக செயல்படுவீர்கள், பணியிடத்தில் மதிப்பு, மரியாதை உயரும். சீருடை, காவல், ராணுவம், மருத்துவம், காவல் துறையை சேர்ந்தவர்கள் புகழடைவர். மனைவியின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. பெரியோர்களின் அனுக்கிரகம், ஆசீர்வாதம் உண்டு. திருமணம், வைபவம், விஷேச நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள் சிறுதூர பயணம் உண்டு. வாகனங்களை கவனமாக இயக்க வேண்டும். வாகன வகையில் சில செலவுகள் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகள் படிப்பில் சராசரியாக இருப்பார்கள். பிள்ளைகளால் சில செலவுகள் ஏற்படும். இளைய பிள்ளைகளால் (மகன் அல்லது மகள்) சில சங்கடங்களை சந்திப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். கலைத்துறையை சேர்ந்தவர்கள் புகழ், ஆதாயம் அடைவர். நாள்பட்ட ஆரோக்கிய தொந்தரவுகளிலிருந்து சில

ருக்கு நிவாரணம் கிடைக்கும். தோள் பட்டை, கழுத்து வலி வந்து போகும். அரசு பணியாளர், அரசு சார்ந்த பணிகளில் சாதகமான சூழ்நிலை நிலவும். அரசியல் வாதிகள் அனுகூலமற்ற நிலையை சந்திப்பார்கள். வீட்டில் வயதானவர்கள் இருப்பின் உடல் உபாதைகளை சந்திப்பார்கள். மூத்த சகோதர வகையிலும், பெரியோர்களாலும் ஆதரவு, ஆதாயம் உண்டாகும். துணைவரின் தாயாருக்கு ஆரோக்கிய குறைவு உண்டாகும். தட்சிணாமூர்த்தி வழிபாடு சங்கடங்களை மட்டுப்படுத்த உதவும். 25, 26 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 28,29 தேதிகள் புதிய திட்டங்களுக்கு உகந்தவை.

## விருச்சிகம்:



உற்சாகம் கூடும். ஆரோக்கியம் மேம்படும். சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். வேலை, பணிகளில் சவால் களை சந்திப்பீர்கள். மேலதிகாரிகளிடம் பொறுமையாக நடந்து கொள்ளவும். குடும்ப சூழ்நிலை திருப்திகரமாக இருக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு ஏற்படும். குழந்தைகளுக்கு திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும். நவநாகரீக பொருட்களை விற்பவர்கள் நல்ல ஆதாயம் பெறுவர். அரசு துறை பணியாளர்களுக்கு பணி நிமித்தமாக அலைச்சல் உண்டு. சிலர் சுக, சௌகரிய தேவைகளுக்காக நகை கடன் ஏற்படும். தொழிலாளர்களுக்கு வருமானம் உயரும். சித்தர்கள், ஆஞ்சநேயர் வழிபாடு செய்வீர்கள். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. தாயாருடன் மனக்கசப்பு ஏற்படலாம். விட்டுக்கொடுத்து செல்லவும். குழந்தைகள் படிப்பில் மந்தநிலை நீடிக்கும். சிலருக்கு படிப்பில் தடை, தடங்கல், தாமதங்கள் உண்டாகும். சனிபகவானுக்கு புதன் கிழமைகளில் எள் விளக்குபோடுதல், ஆஞ்சநேயர் வழிபாடு பலனளிக்கும். குலதெய்வ பிரார்த்தனை, வழிபாடு செய்வீர்கள்.

எதிர்கால திட்டங்களுக்காக அலைச்சல் ஏற்படும். துணைவி பணிக்கு செல்பவராயின் பணியிடத்தில் போனஸ் அல்லது நவநாகரீக பொருட்களை பரிசாக பெறுவார். பணிக்கு செல்லாதவரானால், மூத்த சகோதரி வகையில் ஆதாயம் உண்டாகும். தெய்வீக காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். குலதெய்வ அனுக்கிரகம் ஏற்படும். கை, கால் போன்ற பகுதிகளில் சிலருக்கு தொந்தரவுகள் வந்து போகும். வியாபாரிகள் தொழில் சிறக்கும், விற்பனை அதிகரித்து நல்ல இலாபம் அடைவர் எனினும் கூட்டாளிகளுடன் அல்லது முக்கிய வாடிக்கையாளருடன் கருத்து வேறுபாடுகள் தோன்றலாம் அனுசரித்து செல்வது நன்மை தரும். அரசியல், அரசு துறையை சார்ந்தவர்கள் அவமானங்களை சந்திப் பர். 19. 20 தேதிகள் நலம் தரும். 22, 23 தேதிகளில் கவனம் தேவை.

## தனுசு:



படபடப்பு, பதட்டம் உண்டாகும். சிலருக்கு நிலம் தொடர்பான பிரச்சனைகள் ஏற்படலாம் எனினும் சாதுர்யமாக எதிர்கொண்டு பயனடைவீர்கள். தாயாரின் ஆசிகள் ஆதரவு உண்டு. எதிர்பார்க்கும் பண வரவு மற்றும் பொருட்களின் சேர்க்கை உண்டு. ஆன்மீக ஈடுபாடு கூடும். தொழில், வேலை மற்றும் குடும்ப நிலவரம் சீராக செல்லும். சிறுசிறு உடல் உபாதைகள் வந்து போகும். மனைவியால் ஆதாயம், பொருள் சேர்க்கை உண்டாகும். தொழிலாளர்கள், பணியாளர்கள் நிலைமை சீரடைந்து முன்னேற்றத்துக்கான பாதை தெளிவாகும். கோவில், திருவிழா, சுப நிகழ்ச்சிக்கான பயணங்கள் ஏற்படும். சிலர் பூர்வீகபெரியவர்கள் வாழ்ந்த இடத்திற்கு சென்று வருவார்கள். அலைச்சல் மிகும். இரத்த கொதிப்பு, உஷ்ண சம்பந்தமான தொந்தரவுகள் சிலருக்கு உண்டாகலாம்.சனிபகவானுக்குபுதன்கிழமைகளில் எள் விளக்குபோடுதல், ஆஞ்சநேயர் வழிபாடு பலனளிக்கும். குலதெய்வ பிரார்த்தனை, வழிபாடு செய்வீர்கள். தந்தை பணிக்கு செல்பவராயின் மேலதிகாரிகளால் சில சங்கடங்களை சந்திப்பார். தகவல் தொழில்நுட்பம், பத்திரிக்கை, மீடியா, எழுத்து துறைகளை சேர்ந்தவர்கள் பயனடைவர். பணிக்கு செல்லும் பெண்கள் பயனடைவர். வங்கி, இயந்திர துறைகளை சேர்ந்தவர்கள் சில அசௌகரியங்களை எதிர்கொள்வர். குடும்பத்தாருடன் சுமூக நிலை நீடிக்கும், சுப விரைய செலவுகள் உண்டாகும். தாயாரின் ஆரோக்கியம் மேம்படும். புதிய வாகன சேர்க்கை சிலருக்குஉண்டாகும். எதிர்கால தேவைகளுக்காகசிலருக்கு நீண்டகால கடன்கள் உண்டாகும். தொழிலாளர், பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரித்த போதிலும் உரிய பலன் கிடைக்கும். வங்கி,இயந்திர துறைகளை சேர்ந்தவர்கள் சில அசௌகரியங்களை எதிர்கொள்வர். 27, 28 தேதிகள் புது முயற்சிக்கு உகந்தவை.

## மகரம்:



சில சுய தேவைகளுக்கான விரைய செலவுகள் உண்டெனினும் மனத்தெளிவு பிறக்கும். தொழிலாளர்கள், பணியாளர்கள்கடந்தகால உழைப்புக்கு தற்போது பலன் அனுபவிக்க தொடங்குவார்கள். தொழில் முறை அலைச்சல், பயணங்கள் உண்

டாகும். காவல், ராணுவம், மருத்துவம், இயந்திர துறைகளை சேர்ந்தவர்கள் ஆதாயம் அடைவர். சிறிது படபடப்பு வந்து போகும். வியாபாரிகளுக்கு சுமாரான வியாபாரம் மற்றும் தொழில் நிலை நீடிக்கும். ஆன்மீக ஈடுபாடு உண்டாகும். மனதில் உள்ள பெரிய திட்டங்களை செயல்படுத்துவதில் தடை, தாமதங்கள் நீடிக்கும். தன வரவு சீராக இருக்கும், நிதி, நீதி, ஆன்மீக சேவை சார்ந்த நிறுவனங்களில் பணி புரிபவர்கள் சிறப்பான நிலை அடைவர். பூர்வ புண்ணிய கர்மா ஆதரவாக பலனளிக்கும். சிலருக்கு குடும்பத்தில் புதிய வரவுகள் உண்டாகும். பிள்ளை பிறப்பு போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வியாபார அபிவிருத்திக்கான திட்டங்களை வியாபாரிகள் திட்டமிடுவார்கள். தொழிலாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு பணி, போட்டி தேர்வுகளில் வெற்றி உண்டாகும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். மனைவி வழி உறவுகள் மூலம் பொன், பொருள் சேர்க்கை சிலருக்கு உண்டாகும். பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். அரசியல்வாதிகள், அரசு உயரதிகாரிகள் அனுகூலமற்ற சந்தர்ப்பங்களை எதிர்கொள்ள வேண்டிவரும். வயிற்று பகுதியில் உடல் தொந்தரவுகள் உண்டாகும். உரிய மதிப்பு மரியாதை கிடைக்கும். தந்தையின் ஆரோக்கியம் மேம்படும். அலுவலகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். நீண்டகால ஆசைகள் சிலவற்றை பூர்த்தி செய்வீர்கள். தூக்கம் குறையும். 16, 17 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

## கும்பம்:



தர்ம சிந்தனை கூடும். புனித யாத்திரைகள், குல தெய்வ வழிபாடு உண்டாகும். நிதி,சேவை, நீதித்துறை மற்றும் உடல் உழைப்பை தொழிலாக கொண்ட தொழிலாளர்கள், பணியாளர்கள், வியாபாரிகள் பலன் அடைவர். குடும்ப சூழ்நிலை சீராக செல்லும். அரசு காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு பிள்ளைகளால் சில சங்கடங்கள் உண்டாகலாம். வியாபாரிகள் அலைச்சல் உண்டு எனினும் ஆதாயம் காண்பர். தாயாருடன் சுமூக போக்கு நீடிக்கும் ஆதரவு உண்டாகும். சுப விரைய செலவுகள் உண்டாகும். தனவரவு, ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிள்ளைகள் உங்கள் அறிவுரைகளை ஏற்று செயல்படுவார்கள். உடன் பிறந்தவர்கள் வேலை கிடைத்து, அல்லது வேலை விஷயமாக வெளியூர் செல்வார். வேலையில் சிலருக்கு டென்ஷன், வேலைப்பளு உண்டாகும். பிள்ளை பிறப்பு போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆன்மீக புருஷர்களின் சந்திப்பு உண்டாகும். மூத்த சகோதர சகோதரி, பெண் பிள்ளைகளுக்காக சில செலவுகள் செய்வீர்கள். சுக, சௌகரிய தேவைகளுக்காக செலவுகள் உண்டாகும். வீட்டு சாதன பொருட்களின் சேர்க்கை உண்டாகும். தூக்கம் குறையும். பிள்ளைகளின் படிப்பில் மாற்றம், இடமாற்றம், பள்ளி மாற்றம் அல்லது தற்காலிக தடைகள் உண்டாகலாம். கை, கால், மூட்டு வலி போன்ற தொந்தரவுகள் சிலருக்கு உண்டாகும். துணையின் வழியின் உற்சாகம், ஆதரவு, தைரியம், பணவரவு உண்டாகும். துணை பணிக்கு செல்பவராயின் விரும்பும் பதவி, பெயர், புகழ், செல்வாக்கு முதலிய நேர்மறை பலன்கள் கிடைக்கும். நடைமுறை திட்டங்கள் சீராக நடைபெறும். புதிய திட்டங்களை சிறுது காலத்திற்கு தள்ளி வைக்கவும். அல்லது தங்கள் ஜாதக தசா, புத்தி பலன்களை அறிந்து செயல்படுத்தவும். 29, 30 தேதிகளை புதிய திட்டங்களுக்கு தவிர்க்கவும்.

## மீனம்:



பூர்வீக சொத்து சம்பந்தப் பட்ட விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாக அமையும். உங்கள் பங்கு எதிர்பாராத விதமாக கிடைக்கும். எதிரிகள் தொல்லைகள் குறையும். பிள்ளைகளின் படிப்பு சம்பந்தப்பட்ட பயணங்கள் இருக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம் உண்டு. பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் திருமணம், பிள்ளை பிறப்பு போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும், தாய்மாமன் வகையில் உறவு வலுப்பெறும். துணைவரின் அன்பும் ஆதரவும் உண்டாகும். தைரியம், உற்சாகம் கூடும். வண்டி, வாகன, வீடு வகையில் செலவுகள் இருக்கும். சீருடை பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆதாயம் காண்பார்கள். இளைய சகோதர வகையில் சில அனுகூலமற்ற செய்திகள் வரக்கூடும். துணையால் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும், அவரின் மூலம் குழந்தைகளுக்கு வேண்டிய தேவைகள் பூர்த்தியாகும். துணைவழி உறவுகளின் சந்திப்பு ஏற்படும் நன்மை விளையும். சீருடை பணியாளர்கள் விரும்பிய காரியங்கள் நிறைவேறும். அரசு துறை, அரசியல் சார்ந்தவர்கள் பயனடைவர். நவ நாகரீக பொருட்கள், பொன், வெள்ளி பொருட்களின் சேர்க்கை உண்டாகும். நீண்டகால ஆசைகள் பூர்த்தியாக காலம் கனியும். மகிச்சியான நிகழ்வுகள், நிம்மதியான உறக்கம் உண்டு. துணையின் தந்தையாருக்கு சில உடல் உபாதைகள் உண்டாகும். கவனம் தேவை. புதன் அல்லது சனி கிழமைகளில் தட்சிணாமூர்த்தி வழிபாடு செய்வது உகந்தது. 18, 19 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

# தமிழர் கடவுள் விநாயப் பெருமான்



அழகான ஆற்றாங்கரை படித்துறையை கடந்து மேலேறி வந்தால் அரசமர மேடை அந்த மேடையில் ஏகாந்தமாக அமர்ந்திருக்கும் ஒற்றை பிள்ளையார் அவரை சுற்றி பிள்ளைகள் ஊதிவிட்டு போட்ட பூவரச இலை ஊதுகுழல்கள் ஆற்றில் குளித்து விட்டு பெண்கள் மறந்து வைத்து போன மஞ்சள் கொம்புகள் ஒரு நிமிடம் கண்ணை மூடி மூச்சை ஆழமாக உள்ளிழுத்து சிந்தனை தேரை செலுத்தி பாருங்கள் உங்களுக்குள் ஆயிரமாயிரம் அழுத்தங்கள் மறைந்து கிடந்தாலும் இந்த அற்புத காட்சி உங்கள் மன கண் முன்னால் விரியும் போது எல்லாம் காற்றில் விழுந்த பஞ்சு போல பறந்து போவதை உணர்வீர்கள்.

பிள்ளையார் நமக்கு சாமிமட்டுமல்ல அவர் நம் தோழர் பரிட்சையில் பாஸ்மார்க் போடுவதற்கு வாத்தியாரை மட்டும் கெஞ்சமாட் டோம். பிள்ளையாருக்கும் வந்து தோப்பு கரணம் போடுவோம். பிள்ளையாரப்பா படித்தது எல்லாம் மறந்து போச்சி நான் மறந்து போன கேள்வி எதுவும் வரமால் பார்த்துக்கோ என்று பிள்ளையாரை தவிர வேறு யாரிடம் மனமிட்டு வேண்ட முடியும்.

காலையில் குளித்து முடித்து செப்பு குடத்தில் தண்ணீர் எடுத்து போகும் நமது காதல் தேவதை பிள்ளையார் கோவிலை பார்த்து



ஒரு கும்மிடு போட்டு விட்டு போவாளே! அப்போது அவளையும் பிள்ளையாரையும் சேர்த்துவணங்கி நிற்குமே நம் வாலிப வயது. அந்த வயதின் ஏக்கம் பிள்ளையாரை தவிர வேறு யாருக்கு புரியும் நம்ம ஊர் பெண்களுக்கு பல நேரங்களில் காதல் தூது போவதில் பிள்ளையார் கெட்டிகாரராகவும் இருந்திருக்கிறார்.

காலையில் விடிந்தது முதல் இரவு படுக்க போகும் வரை கொழுப்பு மிகுந்த ஆகாரங்களை தின்று குனியவும் முடியா மல் நிமிரவும் முடியாமல் அவஸ்தை படும் எத்தனையோ பெரிய மனிதர்களை தன் முன்னால் வேர்க்க விருவிருக்க தொப்புகாரணம் போட வைப்பதில் பிள்ளளையார் கில்லாடி என்று எத்தனை முறை அவரை நாம் கேலி செய் திருப்போம்.

அவரை சாமியாக மட்டும் பார்த்திருந்தால் இத்தனை உறவு முறை அவருக்கும் நமக்கும் வந்திருக்குமா? ஆயிரம் திரு விழாக்கள் வந்தாலும் விநாயகர் சதுர்த்தி திருவிழா தான் குழந்தை பருவத்தில் இருந்து நம்மை பெரிதும் கவர்ந்து வரும் திருவிழாவாகும்.

சதுர்த்தி வந்து விட்டால் விடிந்தும் விடியாத காலை பொழுதில் அம்மாவின் முந்தானையை பிடித்து கொண்டு கடைவீதிக்கு போய் களிமண் பிள்ளையாரை வாங்கி மனை பலகையில் உட்கார வைத்து அவருக்கொரு அழகான காகித குடை யும் குத்தி வைத்து. வீட்டுக்கு வந்து நடுவீட்டில் அவரை அமர வைத்து அவருக்கு நைவேத்தியம் செய்வதற்கு முன்பே அவருக்கான கொழுக்கட்டை. சுண்டலை திருடி தின்கும் சுகம் வேறு எப்போது கிடைக்கும். பத்து நாள் பூஜை செய்து கடேசியாக அவரை தலைமேல் தூக்கி போய் குளத்திலே போட்டு விட்டு வரும் போது எதோ வெகுநாள் பழகிய ஒரு நண்பனை இழந்து விட்டது போல ஒரு சோகம் வருமே அந்த சோக சுகத்தை அவரை தவிர வேறு யாராலும் தர முடியாது.






யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

அப்படி நமது ஊனோடும், உதிரத்தோடும் கலந்து விட்ட பிள்ளையாரை தமிழ் நாட்டுக்கே அவர் சொந்தமில்லை வடக்கில் இருந்து ஒரு மன்னன் கொண்டு வந்து தமிழ் நாட்டில் அறிமுகபடுத்திய பிறகுதான் பிள்ளையார் என்றால் யார் என்று தமிழர்களுக்கு தெரியும். என்று சில அரசியல் வாதிகள் பேசும் போது நமது மனம் லேசாக பாதிக்கப்படுகிறது

நம் மனம் புன்படுவதை பற்றி எந்த அரசியல் வாதியும் கவலைப்பட போவதில்லை. என்று நமக்கு தெரிந்தாலும் உண்மையாகவே பிள்ளை யார் தமிழ் மண்ணுக்கு தொந்தமான தெய்வம் இல்லையா? என்ற ஒரு சந்தேகம் நமது மனதின் அடி ஆழத்தில் எழுந்து நிற்கிறது.

பல்லவ மன்னன்னான நரசிம்ம பல்லவன் சாளுக்கியர்களோடுபோர் புரிந்து வெற்றி பெற்று வந்த கை யோடு அவனது படை தளபதியாக விளங்கிய பரஞ்சோதி வாதாபியில் இருந்து கணபதியை செங்காட்டான் குடி என்ற ஊரில் கொண்டு வந்து வைத்து கணபதி வழிபாட்டிற்கு பிள்ளயார் சுழி போட்டார் என்று சில வரலாற்று ஆய்வாளர்கள்சொல்கிறார்கள். பரஞ்சோதி என்ற திருத்தொண்டர் நாயனார் வாதாபியில் இருந்து கணபதியை கி.பி 7 ஆம் நூற்றாண்டில் தான் தமிழகத்திற்கு கொண்டுவந்தார். ஆனால் அதற்கு பலகாலம் முன்பே கணபதியால் வழிபடபட்ட சிவ பெருமானை கணபதிஸ்வரன் என்றுஅழைக்கும் வழக்கம் தமிழகத் தில் இருந்திருக்கிறது. 7 ஆம் நூற்றாண்டில் தான் பிள்ளையாரை தமிழ் மக்கள் அறிந்தார்கள் என்றால் அதற்கு முன்பே கணபதிஸ்வரர் என்ற திருப்பெயர் சிவபெருமானுக்கு தமிழ் மக்கள் மட்டும் கொடுத்தது ஏன்? என்ற கேள்விக்கு திராவிட பரிவாரங்களில் ஊதுகுழலாகபவனி வருகின்ற சில வராலற்று ஆய்வா ளர்கள் பதில் சொல்வது கிடையாது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434






# கன்னிமார்கள் உலா வரும் கோவில்

செங்கல்பட்டு மாவட்டம் பாலாற்றங்கரை யோரம் அமைந்தள்ளது கன்னியம்மன் ஆலயம். செங்கல்பட்டிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. சுமார் 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட ஆலயம் அந்த காலத்தில் இந்த அம்மனை குல தெய்வமாக வழிபட்டவர்கள் வம்சா வழியினர் இங்கு பரவலாகி அநேகபேர்களுக்கு இந்த ஆலயம் குலதெய்வமாக திகழ்கின்றது.

ஆறு, குளம், போன்ற நீர்நிலைகளின் அருகில் கன்னிமார்கள் ஏழுபேர்களின் ஆலயம் அமைத்திருக்கும். இங்கும் பாலாற்றின் கரை யில் ஆற்றினை பார்த்தவாறு இந்த ஆலயம் அமைந்துள்ளது. கன்னிகோயிலுக்கு எதிரே கன்னிமார்களின் காவல் தெய்வமாக வேங்கை சிலைகள் ஏழு அமைந்துள்ளது.

ஆலய சிறப்பு:

காலை 6.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை உணவு இடைவேளையின்றி ஆலயம் திறந்திருக்கும். மாலை 6.00 மணிக்கு மேல் கன்னிமார்கள் உலா வருவதாக ஐதிகம் உள்ளதால் 6.00 மணிக்கு மேல் பக்தர்கள்

www.aanmeegamalar.com





யாவருக்கும் அனுமதியில்லை. செவ்வாய், வெள்ளி, ஞாயிறுகிழமைகளில் பக்தர்கள் கூட்டம் அதிகம் இருக்கும். வீட்டில் நடக்கும் எந்த விஷேஷமானாலும் இங்கு வந்து பொங்கல் வைத்து வழிபாடு செய்தபின்னரே சுபகாரிய வேளைகளை துவக்குவார்கள்.

காதுகுத்தல, மொட்டை அடித்தல், கிடா வெட்டுதல் இங்கு தினசரி நடைபெறும். திருமணம், மஞ்சல் நீராட்டுவிழா, புதுமனை புகுவிழா, சீமந்தம் என எந்த விஷேஷத்திற்கும் முதல்பத்திரிக்கை இங்குள்ள அம்மன் பாதத்தில் வைத்து ஆசிர்வாதம் வாங்கிய பின்னரே உறவினர் நண்பர்களுக்கு வழங்கப்படுகின்றது.

இந்த அம்மனை குலதெய்வமாக கொண்டவர்கள் திருமணம் முடிந்த அன்றே சம்பதி சமேதமாக வந்து இந்த ஆலயத்தினை வழிபட்டு செல்கின்றனர். முகூர்த்தநாளில் புதுமண தம்பதிகளை இங்கு அதிகம் காணலாம். ஆடிமாதம் அம்மனுக்கு உகந்த மாதமானதால்; அதிகப்படியான கூட்டம் இங்கு கூடும்.

ஆடி மாதம் வருகின்ற மூன்றாவது வெள்ளிக்கிழமை மாலை இங்கு தீ மிதி திருவிழா நடைபெறும. இங்கு இது விஷேஷமாகும். அதுசமயம் அதிகப்படியான பக்தர்கள் விரதம் இருந்து தீ மீதிப்பார்கள். திருமண தடை குழந்தையின்மை – மனக் கஷ்டம் என எதுவாக இருப்பினும் இங்கு வந்து அம்மனை வேண்டிக்கொண்டால் பிராத் தனை உடனே நிறைவேறும். இங்கு மஞ்சளுடன் வேப்பிலை கலந்த நீர் பிரசாதமாக வழங்கப் படுகின்றது.

பக்தர்கள் பொங்கல் வைத்த சாம்பல் இங்கு திருநீராக வழங்கப்படுகின்றது. ஆலய கட்டுமான பணி நடைபெற்று வருகின்றது. கோயிலினை ஒட்டி பாலாறு செல்லவதால் குடும்பத்தினருடன் சென்று ஆற்றில் நீராடி பொங்கல் வைத்து பின் அம்மனை வழிபடுவதை காணலாம். ஆன்மீகத்துடன் கூடிய சுற்றுலா தலமாக இந்த இடம் திகழ்கின்றது.

செங்கல்பட்டிலிருந்து ஆலயம் செல்வதற்கு பஸ் – வேன்மற்றும் ஆட்டோ வசதி உள்ளது.



வேலன்

– வேலன், போன்:
9894836096
திருக்கழுக்குன்றம்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com





# நொய்டா கோவில்களில் நடைபெற்ற விசேஷ ஆராதனைகள்

பக்தர்கள் 'ஓம் நம சிவாய' என்று கோஷமிட்டதையும், சிவபெருமான் மீது பல்வேறு பக்தி பாடல்களை பாடுவதையும் காண முடிந்தது.

வேதிக் பிரசார் சன்ஸ்தான் நிர்வாகம், நவம்பர் 7 ஆம் தேதி திங்கட்கிழமை, நொய்டாவில் உள்ள செக்டார் 62, ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் 'அன்னாபிஷேகத்தை' ஏற்பாடு செய்தது. இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் மகா கும்பாபிஷேகம் நடந்த பிறகு, இக்கோயிலில் நடைபெறும் முதல் அன்னாபிஷேகமும் இதுவாகும்.

பக்தர்களின் உதவியால், எல்லா விதமான காய் கறிகாய்களுடன் அலங்காரம் செய்யப்பட்டது, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

பிரம்மஸ்ரீ சங்கர் வாத்யாரின் மேற்பார்வையில், கோவில் அர்ச்சகர்கள்: மணிகண்டன் சர்மா மற்றும் மோஹித் மிஸ்ரா ஆகியோருடன், ஸ்ரீ விக்னேஷ் மற்றும் ஸ்ரீ கணபதி ஆகியோரின் உதவியுடன் அபிஷேகமும் செய்யப்பட்டது. .

இதேபோல், 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் செக்டார் 22ல் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலிலும் அன்னாபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிறிய அளவில் துவங்கி, தற்போது, அதிக அளவில் பக்தர்களை ஈர்க்க துவங்கியுள்ளது.

பல வட இந்தியர்களும் பங்கேற்க ஆரம்பித்துள்ளனர். ஜீரோணாதாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இந்த ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் தேதி மட்டும் நடைபெற்றது. கோவில்





பூசாரி ஜெகதீசன் சிவாச்சாரியார் தலைமையில் பல்வேறு பூஜைகள் நடந்தன.

செக்டார் 62 கோவிலில்'முருக கோஷம்' குழு பாரா யணம், மூன்று ஆண்டுகள் நிறைவடைந்தது, நவம்பர் 5 முதல் 4 ஆம் ஆண்டில் நுழைந்தது. இதையொட்டி, ஸ்ரீகார்த்திகேயருக்கு அபிஷேகமும், சக்கரைப் பொங்கல், எலுமிச்சம்பழ சாதம், பிரசாதமாக அனைத்து பக்தர்களுக்கும் வழங்கப்பட்டது.

செக்டார் 62 கோவிலில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்ற சனி பிரதோஷம் நடைபெற்றது.

பூஜைகள் மற்றும் அபி ஷேகங்களை கோயில் அர்ச்சகர்கள்: ஸ்ரீ மணிகண்டன் சர்மா மற்றும் ஸ்ரீ மோஹித் மிஸ்ரா ஆகியோர் செய்தனர்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370



எஸ்.வெங்கடேசன்






# வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரேக்ய பீடத்தில்

# 1008 கிலோ விபூதியால் பைரவருக்கு அபிஷேகம்

வாலாஜாபேட்டை தன்வந்திரி ஆரே□க்ய பீடத்தில் 103 வயது நம்பூதிரி தலைமையில் லட்ச ஜப பத்ரகாளி யாகம் நிறைவு 3 நாட்களாக நடைபெற்றது.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், பாலா பகுதியை சேர்ந்த 103 வயதுடைய விஷ்ணு நம்பூதிரி தலைமையில், ஹரிகிருஷ்ணன் நம் பூதிரி குழுவினர் 3 நாட்களாக பல்வேறு சிறப்பு பூஜைகளுடன் 1 லட்சத்து 700 முறை பத்ரகாளி ஜெபம் செய்து யாகத்தை நடத்தினர்.

பத்ரகாளி யாகத்தை முன்னிட்டு கேரள குருதி பூஜையும், பத்ரகாளிக்கு சிறப்பு பூஜையும் நடை பெற்றது. 3 நாட்கள் நடைபெற்ற இந்த லட்ச ஜப பத்ரகாளி யாகம் இன்று 18ம்தேதி சிறப்பு பூஜை களுடன் நிறைவு பெற்றது.

இதை தொடர்ந்து மாலையில் லட்ச ஜப மஹா தன்வந்திரி யாகம் தொடங்கியது. 2 நாட்கள் நடைபெற்ற இந்த யாகத்தை தொடர்ந்து மூலவர் ஸ்ரீதன்வந்திரி பகவானுக்கு 81 கலச திருமஞ் சனமும் நடைபெற்றது. இதை தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு ஹோமங்கள், பூஜைகளில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர்.

வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர்.ஸ்ரீமுரளிதர ஸ்வாமி களின் ஆக்ஞைப்படி, அசிதாங்க பைரவர், ருரு பைரவர், சண்ட பைரவர், குரோதண பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், பீஷ்ண பைரவர் மற்றும் சம்ஹார பைரவர் என அஷ்ட பைரவர்களும் சேர்ந்து ஒரே கல்லில் ஸ்ரீஅஷ்ட கால மகா பைரவருக்கும், சொர்ணாகர்ஷண பைரவருக்கும் தனி சன்னதி என தன்வந்திரி பீடத்தில் மட்டும் மொத்தம் 10 பைரவர்கள் தனி சன்னதியில் பக்தர்களுக்கு திருக்காட்சி அளித்து அருள்புரிந்து வருகின்றனர்.

தன்வந்திரி பீடத்தில் அஷ்டமி தோறும் பைரவர் களுக்கு சிறப்பு ஹோமங்களும், அபிஷேக, ஆராதனைகளும் நடைபெற்று வருகிறது.

நவம்பர் 16ம் தேதி புதன்கிழமை தேய்பிறை அஷ்டமி மற்றும் கால பைரவர் ஜெயந்தியை முன்னிட்டு 64 பைரவர்களுக்கான ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் ஸ்ரீ அஷ்டகால மகா பைரவருக்கு 1008 கிலோ விபூதியால் சிறப்பு அபிஷேகமும், வடை மாலை சாற்றி சிறப்புபூஜை கள் நடத்தப்பட்டு, மகா தீபாராதனை நடை பெற்றது. சொர்ணாகர்ஷண பைரவருக்கும் சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றது. பைரவர் 1008 கிலோ விபூதி அபிஷேகத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு நீண்ட வரிசையில் நின்று பைரவருக்கு விபூதி அபி ஷேகம் செய்து மனமுருக பைரவரை வழிபட்டு சென்றனர்.

– சீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# சூட்சும உலகின் எந்த ஜீவனும் உங்கள் உணர்வில் நுழைய முடியாது

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “நீங்கள் ஆன்மீகமாக ஏற்கும் திறன் படைத்தவராக இருந்தாலொழிய உயர்ந்த மகான்களின் எண்ணங்களுடன் இசைந்திருக்க முடியாது. புனித மகான் ஒருவரின் சான்னித்தியத்தை எழுப்புபவர், ஆன்மீக வளர்ச்சியடைந்த தயார் நிலையில் இல்லாவிட்டால், அந்த மகான் அவரிடம் தொடர்புகொள்ள முடியாது. உதாரணமாக, நீங்கள் கிருஷ்ணன் அல்லது புத்தரின் ஆன்மாவை அழைக்கிறீர்கள் என வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய உணர்வு நிலையானது தியானத்தின் மூலம் நன்றாகப் பண்படுத்தப்பட்டு நீங்கள் அவர்களை வரவேற்கும் நிலையில் இருந்தாலொழிய, இவர்களைப்போன்ற தெய்வீகமானவர்கள் தரிசனம் தரமாட்டார்கள். அவர்கள் வெளித்தோன்றும்போது ஏற்படும் அதிர்வலைச்சக்தியானதுமிகமிகத் தீவிரமாக இருப்பதால், அது ஆன்மீகப் பக்குவமடையாத வருடைய உடலையும் மூளையை யும் எரித்து விடக்கூடும். இந்த அவதார புருஷர்களையும் அனேக மகான்களையும் நான் பார்த் திருக்கிறேன்; நீங்க ளும் கூட உங்களுடைய சொந்த ஆன்மீக அதிர்வலை மிகவும் சக்திவாய்ந்ததாக ஆகும்பொழுது அவர்களைப் பார்க்கலாம். இந்த தெய்வீக ஆன்மாக்கள் எல்லாம் பரவெளியில் இருக்கின்றனர். பூதஉடலை துறந்தபிறகு யாருமே இதுவரை சூனியமாக ஆகவில்லை. உங்களுடைய பிரார்த்தனைக்கு அவர்கள் செவிசாய்த்து உங்களை ஆசீர்வதிக்கிறார்கள். பூமியிலோ அல்லது மனிதனின் பரிணாமம் மேலும் வளர்ச்சி அடைந்துள்ள மற்ற உயர்ந்த கிரகங்களிலோ அவர்கள் மறுபிறப்பு எடுத்திருந்தாலொழிய அவர்கள் சூட்சும உலகில்தான் வாழ்கிறார்கள்.”

“எனவே நீங்கள் உங்களை மேம்படுத்திக் கொள்ளவேண்டும். கிருஷ்ணன் மற்றும் யோகதாவின் உயர்ந்த குருமார்கள் போன்ற தெய்வீக புருஷர்களுடன் அதிகம் இசைந்திருக்க பெருமுயற்சி செய்யுங்கள். மிக ஆழ்ந்த



143
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

இசைந்திருத்தல் மூலம் உங்கள் அகத்தே இந்த மகாபுருஷர்களில் யாராவது ஒருவரைப் பார்த்தீர்களானால் அவர்களுடைய ஆசீர்வாதங்கள் மூலம் உங்களுக்குள் நன்மை தரும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பிக்கும். நாம் பேசிக் கொண்டிருக்கும் இந்த விஷயங்கள் எல்லாம் சாதாரணமானவை அல்ல.”



குருப்ரியா

“நீங்கள் ஒருபோதும் எதிர்மறையான மனதுடன் இருக்கக்கூடாது. அதாவது மறு உலகத்திலிருந்து வரும் செய்திகளுக்காக மௌனமாக அமர்ந்து மனதைத் “திறந்து” வெறுமையாக வைத்திராதீர்கள். இந்தப் பயிற்சி, ஸ்தூல உலகில் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தவும், அனுபவிக்கவும் மனித வாகனங்களைத் தேடி வானவெளியிலுள்ள உடலற்ற ஆன்மாக்கள் ஒருவர், ஏற்றுக்கொள்ள ஏதுவாக்கும். இந்த ஆன்மாக்கள் மிகவும் தாழ்ந்த பிரிவைச் சேர்ந்தவை. இந்த உலகின்மீது அவை கொண்டிருக்கும் தீவிர பற்றானது சூட்சும உலகில் உள்ள மிகவும் மேம்பட்ட வாழ்க்கைக்கு ஏற்றபடி அவை இயல்பாகவே ஒத்துப்போவதை தடுக்கின்றது. சூட்சும உலகில் தங்கி இருப்பதை விட்டுவிட்டு, அவை சூட்சும மற்றும் ஸ்தூல வெளிகளுக்கு இடையில் சுற்றித்திரிகின்றன. மேலும் எப்பொழுதாவது, பலவீனமான மனதும் மிகவும் கீழான உணர்வுநிலையும் கொண்ட யாராவது ஒருவரை பிடித்துக்கொள்வதில் வெற்றியடைகின்றன.

“நல்ல ஆன்மாக்களை ஈர்ப்பதற்கு உங்குளுக்கு ஆழ்ந்த மன ஒருமைப்பாடும் உங்களுடைய உணர்வுநிலையை ஒரு பரிசுத்தமான, ஆன்மீக நிலைக்கு உயர்த்தவும் வேண்டும். உயர் உணர்வு நிலையில் உங்களுடைய அனுபவங்களின் போக்கை உணர்வு பூர்வமாக இயக்கலாம். எனவே நீங்கள் தியானிகுகும்பொழுது ஓர் உயர்ந்த எண்ணநிலையில் இருக்கிறீர்கள். தாழ்ந்த சூட்சும வெளியில் வசிக்கும் உடலற்ற ஆன்மாக்கள் அல்லது எதிர்மறை அல்லது தீய ஆத்மாக்கள் உங்களைத் தொடர்பு கொள்ள முடியாது.”

மேலும் அவர் தொடர்கிறார்: “உயர்ந்த ஆன்மீக வளர்ச்சி அடைந்து, உணர்வு நிலையின் எல்லா தளங்களையும் தன்வயப்படுத்திவிட்ட சூட்சும உலகின் எல்லா பகுதிகளுக்குள்ளும் உயர்ந்தவை மற்றும் தாழ்ந்தவை – பார்க்கமுடியும். மேலும் அந்தப்பகுதிகளிலிருக்கும் ஆன்மாக்களுக்கு அவர்களது சில கர்மவினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு ஆன்மீக உதவி செய்யவும் முடியும். எனக்கு இந்த உலகத்தைப் போன்றே அந்த மறுஉலகமும் உண்மையாக இருக்கிறது. சில நேரங்களில் நான் என்னுடைய இடது பக்கமாக உறங்கும்பொழுது, எல்லா வகையான இருண்ட ஆத்மாக்களும், என்னைச்சுற்றி நடனமாடுவதைப் பார்க்கிறேன். நான் அவற்றை ஆசீர்வதித்ததும். அவை சென்றுவிடுகின்றன. நான் வலதுபக்கமாக உறங்கும்பொழுது இந்த மாதிரியான ஆன்மாக்களை நான் காணபது அபூர்வம். ஏனென்றால் உடலின் வலதுபுறம் நேர்மின் பகுதியாகும். தெய்வீக உயிரோ இங்கு வலிமையாகப் பாய்கிறது. எனவே அதன் ஆன்மீக அதிர்வு எதிர்மறை சக்திகளை தடுக்கும் ஒரு திரை போன்று பணியாற்றுகிறது. இதனால்தான் யோகதா சத்சங்கத்தின் ஓம் உத்தியைப் (யோகதா சத் சங்கப் பாடங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது) பயிற்சி செய்யும்பொழுது, தியானம் செய்பவர் வலதுகாதில் பிரபஞ்ச அதிர்வின்மீது ஒருமுனைப்பாட்டுடன் தியானிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்கப்படுகிறது.”

“நீங்கள் இறைவனைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுதோ அல்லது இறைவன்மீது தியானித்துக்கொண்டிருக்கும்பொழுதோ அல்லது புருவங்களின் மத்தியில் (கூடஸ்தசைதன்யம்) உங்கள் உணர்வை ஒருமுகப்படுத்தும்பொழுதோ சூட்சும உலகின் எந்த ஜீவனும் உங்கள் உணர்வில் நுழைய முடியாது. உயர்ந்த ஆன்மீக அதிர்வலைகளைத் தாங்க முடியாத, தாழ்ந்த சூட்சும உலக ஜீவன்களாலும்கூட மறுஉலகில் இறைவன் மிகவும் மதிக்கப்படுகின்றான்.”

மறுபிறவி எடுத்த நம் அன்புக்குரியவர்களை நாம் கண்டுபிடிக்க முடியும்.

அன்பு குருதேவர் அருளுகிறார்: “சாதாரணமாக ஆன்மாக்கள் கர்மவினைப்படி முன்கூட்டியே நிச்சயிக்கப்பட்ட காலம்வரை சூட்சும உலகில் தங்கி இருப்பார்கள். அதன் பின்னர் பூமியில் மறுபிறவி எடுப்பார்கள். மிகவும் முன்னேற்றமடைந்த ஆன்மாக்கள் சூட்சும சுவர்க்கத்தில் அவர்கள் எதுவரை விரும்புகிறார்களோ அதுவரை இருக்கமுடியும். ஆனால் நீங்கள் நேசித்தவர்களில் சில ஆன்மாக்கள் இன்னும் தேடிக்கொண்டிருக்கையிலேயே பூமியில்

மறுபிறவி எடுத்திருந்தால் என்ன செய்வது? நீங்கள் உங்கள் அன்பை அவர்களுக்குத் தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருந்தால், அவர்கள் உங்கள் எண்ணங்களை உணர்வார்கள். அவர்கள் உறங்கும்பொழுது ரூ அதாவது அவர்களுடைய உணர்வு மனம் உறங்கி அடிமனம் விழித்திருக்கும்பொழுது ரூ அவர்கள் உங்கள் அன்பை ஏற்றுக்கொள்வார்கள். காலப்போக்கில் அந்த ஆன்மாக்கள், அவர்களுக்கு நீங்கள் அனுப்பிக்கொண்டிருக்கும் அதிர்வலைகளை உணர்ந்துகொள்வார்கள். மேலும் அவர்கள் ஞாபகத்தில் வைத்து புரிந்து கொள்வார்கள். இன்னமும்கூட நீங்கள் நிச்சயமாக ஒருவருக்கொருவர் மீண்டும் ஈர்க்கப்படுவீர்கள்; உங்களுடைய முந்தைய உறவின் நெருக்கத்தையும் உணர்வீர்கள்”.

“நீங்கள் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்திருந்தால் நான் என்னுடைய குருநாதர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரரை இந்தப் பிறவியில் நாங்கள் சந்தித்தபொழுது எப்படி நான் அறிந்துகொண்டேனோ, அதேபோல் உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஆன்மாக்களை நீங்களும் உணர்வுபூர்வமாக அடையாளம் கண்டுகொள்வீர்கள். அவர் எனக்கு எண்ணங்கள் ஒலிபரப்பிக்கொண்டே இருந்திருக்கிறார். அதனால்தான் குருநாதர் அடிக்கடி என் எண்ணங்களில் வந்துகொண்டிருந்தார். மேலும் இப்படித்தான் நான் இந்தப்பிறவியில் அவரை சந்திப்பதற்கு வெகுகாலம் முன்பே அவரைப்பற்றி அறிந்திருந்தேன். பலதடவைகள் தியானத்திலும் கனவுகளிலும் நான் அவரைக்கண்டிருக்கிறேன். நான் உறங்கும்பொழுதும் அல்லது தியானிக்கும் பொழுதும் அவர் ஒலிபரப்பிக்கொண்டிருந்த அதிர்வலைகளை நான் பெற்றிருக்கிறேன். எனவே நான் அவரை முதலில் சந்தித்தபொழுது உடனேயே அவரை அறிந்துகொண்டேன். அதேபோல் உங்களுடைய அன்புக்குரியவர்கள் பூமியில் மறுபிறப்பு எடுந்திருந்தால், அவர்கள்மீதான உங்கள் அன்பு தீவிரமாக இருந்தால், அவர்கள் உங்களிடம் மீண்டும் கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் இந்தப் பிறவியிலோ அல்லது அடுத்த பிறவியிலோ உங்களுடைய வாழ்க்கையில் மீண்டும் ஒருமுறை ஈர்க்கப்படுவார்கள்.”

“பொதுவாக ஒவ்வொரு புதுப்பிறவியிலும் இயற்கையானது முற்பிறவிகளில் நமக்குத் தெரிந்திருந்த குறிப்பிட்ட மனிதர்களையும் ஆன்மாக்களின் உறவுகளையும், மறக்கடிக்கச்செய்கிறது. என்ன ஒரு பேறு! கடந்தகால வாழ்க்கைகளில் நீங்களும் நீங்கள் நேசித்தவர்களும் ஏற்று நடித்திருந்த எல்லா பாத்திரங்களையும் நீங்கள் ஞாபகத்தில் வைத்திருந்தால், எவ்வளவு குழப்பமாக இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். எந்தத் தாயை, தந்தையை, கணவனை, மனைவியை அல்லது குழந்தையை நேசிப்பது என உங்களுக்குத் தெரியாது. இறைவன் நம்முடைய ஞாபகத்தை மங்கச்செய்து இம்மாதிரியான குழப்பங்களை தடுத்து விடுகிறான். ஆதலால் நம்முடைய தற்போதைய பிறவியிலுள்ள உறவுகளை நாம் தடையின்றி நிறைவு செய்ய முடிகிறது.”

குருதேவர் கூறியுள்ளவாறு நாம் அனைவரும் இறைவனைத் தேடிக்கண்டுபிடித்தால் நாமும் அவர் போன்று எல்லாம் தெரிந்துவிடலாம். அதுவே நமது குறிகோளும்கூட. நமது உண்மையான குறிக்கோளை அடைய குருபோதனைகளை ஏற்றுக்கொண்டு பயிற்சி செய்ய வேண்டும். பின்னர் இறைவனை அடைவதற்கான முயற்சி செய்ய வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909



ஆன்மிகமலர்
மெயில் புக்

ஆன்மிகமலர்.காம் இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

140 இதழ்களையும்

இலவசமாக டவுன்லோடு செய்ய கீழே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்யவும்...

Scan to Read-
aanmeegamalar
E-magazine

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம் .காம்

ஆன்மிக மலர்கள்...

- புண்ணிய தீர்த்தங்களில் நீராடி புண்ணியம் பெற விரும்புபவர்கள், வீட்டிலேயோ மற்ற இடத்திலோ குளித்த பின்பு கடல், கங்கை, சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடினால் புண்ணியம் கிடைக்கும், பாபங்கள் குறையும்.
- விரத நாட்களில் பெண்கள் உபவாசம் இருப்பதற்கு விரும்புவார்கள், ஆனால் மாதவிடாய் காலங்களில் உபவாசம் இருக்கலாமா என்ற சந்தேகம் ஏற்படும். பொதுவாக ஏகாதசி போன்ற விரதநாட்களில் அனைத்து பெண்களும் உபவாசம் இருக்கலாம். கோவிலை தவிர்த்து, வீட்டிலேயே உபவாசம் இருக்கலாம். இதனால் எந்தவித பாபமும் தோஷமும் ஏற்படாது.
- பூஜைசெய்ய ஆசை, ஆனால் அதற்குரிய சாதனங்கள் கிடைக்காமல் எப்படி பூஜை செய்வது என்று புலம்புபவர்கள், பூஜைக்கு எந்த சாதனம் கிடைக்கவில்லையோ அந்த சாதனத்தை மனதால் தியானித்து கொண்டு பூஜை செய்தால் அவர்கள் செய்யும் பூஜை பூர்ணமாகிவிடும்.
- அமாவாசை இரவில் பாலும் பௌர்ணமி இரவில் அரிசி சம்பந்த மான உணவும் சாப்பிடுதல் கூடாது.
- சூரியன் உதிக்கும் போதும் அஸ்தமிக்கும் போதும் சூரியனைப் பார்க்கக்கூடாது.
- கோயில், புண்ணிய ஷேத்ரம்,கர்பவதி, வயதானோர்,குரு,குழந்தைகள் உள்ள வீடு இங்கெல்லாம் சென்றால் வெறுங்கையுடன் செல்லக்கூடாது.
- இல்லாதவனுக்குக் கொடுக்கும் தானமும், பூஜை இல்லாக் கோயிலுக்கு பூஜை செய்ய உதவுவதும், அனாதைப் பிரேதங்களை அடக்கம் செய்வதும் அஸ்வமேத யாகம் செய்த பலனைக் கொடுக்கும்.
- மனைவியைக் கணவன் ஜாதகப் பெயரில் சொல்லி அழைக்கக் கூடாது. குழந்தைகளுக்கு நதி, நட்சத்திரங்கள், மரங்களின் பெயர்களை சூட்டக்கூடாது.
- ஒற்றை ருத்திராட்சத்தைக் கழுத்துக்குழிக்கு மேல் கட்ட வேண்டும்.கீழே இறங்கக் கூடாது அது எப்போதும் கழுத்தில் இருக்கலாம்.
- சுமங்கலிப் பெண்கள் இரவில் பட்டிக் கிடந்தால் குடும்பத்திற்கு ஆகாது.
- ஒரு போதும் இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படாத அன்னத்தை உண்ணக் கூடாது. வீடுகளில் சமைக்கும் உணவினை சாப்பிடுவதற்கு முன் கண்ணனை நினைத்து வாயில் போட்டால், அந்த அன்னத்தால் ஏற்படும் சத்து நமது உடலுக்கு சமச்சீராக கிடைக்கும். இது
- இல்லற வாழ்க்கை வாழ்வது சிற்றின்பம் இல்லறத்தில் இருந்து கொண்டு பரம்பொருளை நினைத்து வாழ்வது பேரின்பம்.
- வீட்டில் ஸ்வாமியிடம் ஏற்றிய தீபத்தை வாயினால் ஊதி அணைக்கக் கூடாது.விரலால் பால் தொட்டு வைத்தோ, குங்குமம் வைத்தோ, பூவாலோ அமர்த்தலாம்.
- செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, துவாதசி, மாலை நேரம், இரவு நேரம் போன்ற காலங்களில் துளசி மற்றும் வில்வத்தை பறிக்கக்கூடாது
- திதி, வாரம், நட்சத்திரம், யோகம் கரணம் எனும் ஐந்து அங்கங்களை பஞ்சாங்கம் என்று அழைக்கிறோம்.
- பூஜை செய்யும் போது பூத்தட்டை மடியில் வைத்து பூவெடுத்து பூஜை செய்யக் கூடாது.
- உலக வாழ்க்கை வாழ்வது நிலையற்ற சிற்றின்பம் இறைவன் திருவடியை அடைவது நிலையான பேரின்பம்

# ஆன்மிகமலர்.காம் வழங்கும்

# 2023-ம் ஆண்டு மாத காலண்டர்

# அற்புத தகவல்களுடன் தயராகிறது







சர்வசுதர்சன நேரம், சுபமுகூர்த்த தினங்கள், பண்டிகைகள் விபரம், அரசு விடுமுறை நாட்கள், அழகிய ஸ்வாமி படங்கள், அற்புத ஆலயங்கள் பற்றிய தகவல்களுடன் உயர்தர ஆர்ட் காகிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**அனைத்து புத்தக கடைகளிலும் கிடைக்கும்**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

Ph:9994323622 W.No:9444228203

## கீழடியைப் போன்று மானாமதுரையிலும் கல்வெட்டுக்கள் ஆயிரம் ஆண்டு பழமையான கோவில் புதையுண்டுள்ளதா

# பழமையான சிவலிங்கம் கண்டெடுப்பு

## தொல்லியல்துறை ஆய்வு செய்ய கோரிக்கை





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மேலபசலை அரசுபள்ளி அருகே மதுரை ராமேசுவரம் செல்லும் நான்கு வழிசாலை மிக அருகில் மிகவும் பழமையான ஆயிரம் ஆண்டுகள் முந்தைய சிவலிங்கம் திருமேனி பக்தர்களால் கண்டுபிடிக்க பட்டுள்ளது.

இந்த பழமையான சிவலிங்கம் கோவிலுடன் புதையுண்டு உள்ளதா? என ஆய்வாளர்களை நியமித்து அறநிலையத்துறை கண்டு பிடிக்க வேண்டும் என பக்தர்கள் கோரி வருகின்றனர்.

இந்த சிவலிங்கத்திற்கு பூஜைகள் செய்து அவர்கள் வழிபடுகின்றனர்.

இந்த சிவலிங்கம், கிழக்கு திசைநோக்கி மிகபெரிய வடிவில் உள்ளது. அருகே ஒரு கருங் கல் பீடமும் அதில் சிவபெருமான் வாகனமான நந்தி உருவமும் சிலையாக வடிக்கப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் சீமை கருவேல் மரங்கள் அதிக அளவில் காடுபோல் இருந்தது. தற்போது சீமை கருவேல் மரங்கள்



அகற்றப்பட்டதால், சிவலிங்கம் திருமேனி சாலையில் நின்று பார்த்தாலே தெரிகிறது.

இவ்வழியே செல்லும் சிவனடியார்கள் தாங்களே அபிஷேகம் செய்து வஸ்திரம் அணி வித்து விளக்கு ஏற்றி வழிபாடு செய்து செல்கின்றனர்.

பலஆண்டுகள் முன்பே பக்தர்கள் காசி ராமேஸ்வரம் பாதயாத்திரையாக செல்லும் போது



இந்த சிவலிங்கத்திற்கு வழிபாடு செய்துள்ளனர்.

மதுரையில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் வரை வழிநெடுகிலும் சிறிய அளவில் சிவாலயங்கள், மடங்கள் சத்திரங்களை அப்போதைய மன்னர்கள் கட்டியுள்ளனர். இப்போது மதுரை ராமேசுவரம் சாலையில் பீசர்பட்டிணம் என்ற இடத்தில் சிவலிங்கத்துடன் மடம் உள்ளது.

அதேபோல் மேலபசலை பகுதியில் சிவாலயம் இருந்து, காலமாற்றத்தால் இடிந்துதற் போது சிவலிங்கம் திருமேனி மற்றும் காளை உருவத்துடன் கருங்கல் பீடம் மட்டுமே தென்படுகிறது.

இதே போல் மானாமதுரை அருகே கட்டிக்குளம், சின்னகண்ணூர் பகுதியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய விநாயகர் சிலை அம்மன் சிலைகள் தமிழ் கல்வெட்டுகள் வரலாற்று ஆய்வாளர்கள் கண்டு பிடித்து உள்ளனர்.

இதேபோல் இப்பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தால் பழமையான கோவில் ஏதும் புதைந்து உள்ளதா மேலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சிவ வழிபாடு செய்யபட்டதற்கான மேலும் பல சுவாமி சிலைகள் இருக்குமா என ஆய்வாளர்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

மானாமதுரையை சேர்ந்த சிவபக்தர் ஆனந்த பாண்டியன் கூறியதாவது:

இங்கு வந்து பூஜை பொருள்களை கொண்டு வந்து நானே அபிஷேகம் அலங்காரம் செய்து சங்குநாதம் மற்றும் சிவவாத்தியங்களை வாசித்து வழிபாடுசெய்து செல்கிறேன்.

என்னை போன்று ஏராளமான பக்தர்கள் இதுபோன்று வழிபாடு செய்து செல்கின்றனர். இப்பகுதி கிராம மக்கள் ராமேஸ்வரம் யாத்திரை செல்லும் பக்தர்கள் வழிபாடு செய்யும் வகையில் இந்துசயய அறநிலையதுறை நிர்வாகம் கோவில் அமைக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். தற்காலிகமாக சிவலிங்கம் திருமேனிக்கு நிழற்குடை அமைக்க வேண்டும் என்று கிராம மக்கள் அறநிலையத்துறைக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.



அழகுராஜா

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994323622


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

இணையதளத்திற்கும், ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கும் விருப்ப சந்தா செலுத்தி, நமது இதழின் வளர்ச்சிக்கு ஊக்கமளியுங்கள்

Scan to Pay with any BHIM UPI App



எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை



# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் ரூ.10 முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

Paytm BHIM BharatPe

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

# இறைவனின் இயற்கை மறைவாகவே இருக்கிறது

நாம் நமது நாட்டின் வரவு செலவுத் திட்டங்களையும் விரிவாக்க எண்ணங் களின் வரைவுத் திட்டங்களையும் ஆண்டுக்கு ஆண்டு புதிதாகத் தீட்டி முடித்துவிடுகிறோம். காலி பொருளாதாரச் சிந்தனைகளை வைத்துக் கொண்டு இப்படி நாம் திட்டம் தீட்டுவது உலக அரங்கில் ஒரு குழந்தை விளையாட்டைப் போன்றதே இது.

❖ ❖ ❖

இந்தியா சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இந்த துன்பத்தில் சென்று கொண்டிருக்கிறது ஆனாலும் எவரும் இதைப் பற்றிக் கவலைப் படுவதாகவே தெரிவதில்லை. இதுதான் நமது நிகரான உண்மை.

❖ ❖ ❖

அரசியல் என்பது ஒரு முறையான விஞ்ஞானம். அதில் ஜாதி என்பது முறையான விஞ்ஞானமும் அல்ல. அரசியல் அல்ல. இதுவே உண்மையின் அடிப்படை ஆயினும் யார் இதை நமது அரசியல்வாதிகளுக்கு சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள்?

❖ ❖ ❖

ஒவ்வொரு நாட்டின் ஜாதகமும் எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கின்றன. காரணம் இது ஆண்டவனால் கணிக்கப்படுவதாகும். ஆனால் ஒவ்வொரு நாட்டின் அரசியல்வாதிகளின் ஜாதகம் ஒன்று அற்புதமாகவும் அல்லது மோசமாகவும் அல்லது இத் தன்மைகள் ஒவ்வொருவரின் அபூர்வப் பிறவிகளாகவும் இருக் கின்றன. இரண்டு நிலைகளையும் கணிக்கவே வேண்டாம், பார்த்துக் கொண்டு இருங்கள்.

❖ ❖ ❖

நாட்டுக்காக இன்றைய மக்களின் நடைமுறை செய்கையும் பழக்கமும்



ஒன்றுமே இல்லை. தற்பொழுது நிலவுகின்ற மனிதனது சிந்தனையினுள் வேறு ஏதோ ஒன்று தனியாக ஓடிக் கொண்டிருக்கிறது. அது என்னவென்றால் உடனுக்கு உடன் உடலுக்கு இன்பத்தைத் தேடி அதற்காக வாழுவதே ஆகும். இந்த வழக்கமான நடைமுறையையே அவன் வாழ்க்கை என்று கூறுகிறான்.

❖ ❖ ❖

மெய்யன்பர்களே வாழ்க்கை என்பது வாழ்க்கை அல்ல. அது ஒரு தத்துவம். இந்த வண்ணம் நீ உலகில் இருக்கிற சிந்தனை முறையை செய். கேவலம் உலகில் உயிருடன் இருந்து கொண்டிருப்பதே வாழ்க்கை அல்ல. வாழ்க்கையை உணருவதே வாழ்க்கை.

❖ ❖ ❖

நீயே இந்த தத்துவத்தை ஒருவகை தத்துவமாக பாகுபடுத்தி அதை தத்துவசிந்தனை என்ற அலமாரியில் வைத்துவிடுவாய். தத்துவம் என்பது அப்படிப்பட்டதல்ல. அது ஒரு மனிதனின் விட்டுச் செல்லுகின்ற உண்மையான உலகக் கொள்கை.

❖ ❖ ❖

தெளிந்த நீரோடைக்கு வழி காட்டுகின்ற சிந்தனையாளர்கள் எல்லாம் தத்துவ வாதிகளே. நீ முதலில் தத்துவத்தைத் தேடும் பொழுது அதற்கு முன் சிந்தி, பிறகு ஆராய்ந்துவிடு, அதன் பின்பே நீ ஒரு வெற்றி கொண்ட மனிதனாவாய்.

❖ ❖ ❖

கல்வி என்பது ஒரு அழகான தத்துவம். அது உன் தலையில் இருக்கின்ற ஒரு சேமிப்பு கிடங்கு. சிறிது நாட்களுக்குள் அதுவே




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
**செல்: 9444228203**

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



**ஆசிரியர் குழுவில் இணையலாம்**

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


உனக்கு ஒரு இலாபம். அந்த ஒன்றே ஒரு சிறிய பகுதியின் அறிவை உனக்கு தானே விளக்கிவிடும். இத்தகைய இயற்கையான நடைமுறையில் உன்னிடம் தோன்றுகின்ற தவறுகள் உனக்கே தெரியாமல் போய்விடும். அப்பொழுதான் இத்தகைய கல்வியில் குற்றம் கண்டுபிடிக்கப்படுகிறது.

❖ ❖ ❖

உன்னுடைய சொந்த தவறுகளை நீயே கண்டுபிடி, பிறர் கண்டுபிடிக்க விட்டு விடாதே. எப்படி கண்டுபிடிப்பது என்றால் சிந்தனை, ஓயாத படிப்பு, எடுத்து இயம்புதல், பேசுதல், உறுதிப்படுத்துதல் இவைகளினால் அது முடியும். இவ்வண்ணம் உனது தவறுகளைக் களைந்துகொண்டு உன்னையே திருத்தப் பாதையில் வைத்து நீயே முன்னேறுவாய் இதுவே கல்வி.

❖ ❖ ❖

மேற்சொன்னது உண்மை ஆராய்ச்சி என்றாலும் கல்வி கற்பதற்காக கல்வி சம்பந்தமான கேள்விகளை எழுப்புவது மட்டும் உனது சிந்தனையின் பகுதி என்று எண்ணிவிடாதே. கேள்வி கேட்பது மட்டும் சிந்தனையல்ல. அது அதிக அறிவைப் பெறுவதற்கு உண் டான வழிவகை ஆகும். இத்தகைய மனிதன் கிடைக்கப் பெறாத ஒரு அற்புத மாணாக்கன் ஆவான்.

❖ ❖ ❖

ஒரு குருவோ ஒரு பேராசிரியரோ நடைமுறையில் ஓடுகின்ற ஒரு பெருக்காறு ஆகும். ஆறு ஓடிக் கொண்டே இருப்பதைப் போல நீ எல்லா இடத்திற்குமாகத் திரி. பார்ப்பவைகளில் இருந்து உணருபவனைப் போன்று, அறிவைப் பெறு. இத்தகைய மனிதனிடம் இருந்தே அன்பு என்பது பிறக்கின்றது.

❖ ❖ ❖

ஆழகான மாமிசம், தோல் இவைகளால் மூடிய உடம்பை ஈர்ப்பது மட்டும் காதல் என்ற அன்பு அல்ல. மேற்சொன்னது இரண்டு உயிர்களுக்கு மத்தியிலே ஏற்படுகின்ற ஒரு சுத்தமான பரிவர்த் தனையும் எண்ணக்குவியல்களுமேயாம். இவைகளைக் கொட்டுகின்ற புத்தியைப் பார்.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# சிவபெருமான் விரும்பும் இடம் திருவெண்டுறை

அருள்மிகு வேல்நெடுங்கண்ணிஅம்மன் உடனுறை வெண்டுறைநாதர் திருக்கோயில் – திருவெண்டுறை

அமைவிடம்:

மன்னார்குடியில் இருந்து 10 கி.மி. தொலைவில் இத்தலம் இருக்கிறது. மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் சாலையில் வீராக்கி என்ற இடத்தில் இறங்கி இத்தலத்தை அடைய லாம். மன்னார்குடி வீராக்கி செல்லும் நகரப் பேருந்துகள், மன்னார்குடி சேந்தங்குடி செல்லும் நகரப் பேருந்துகள் வண்டுதுறை வழியாகச் செல் கின்றன.

பிரம்மனுக்கு படைப்புத் தொழிலில் தடை ஏற்பட்டபொழுது இங்கு உமையொருபாகனாகிய சிவபெருமானை வழிபட்டு ஆணையும், பெண் ணையும் தடையின்றிப் படைக்கும் ஆற்றல் பெற்றான் என்று கூறப்படுகிறது.

பிருங்கி முனிவர் வண்டு உருவில் இறைவனின் திருமேனியின் இடையில் துளைத்துச் சென்று அவரை மட்டும் வலம் வந்தமையால், அம்பிகை சாபம் தர, வண்டு உருவில் இருந்து இங்கு வழிபட்டார் என்பது வரலாறு. (கருவறையில் வண்டின் ரீங்கார ஒலி கேட்பதாகப் பண்டை நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இது 112வது தலம்.

சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவால யங்களில் இது 176 வது தேவாரத்தலம் ஆகும்.

இறைவர் திருப்பெயர்: மதுவனேஸ்வரர், பிரமரேஸ்வரர், பிரமபுரீசர், வெண்டுறைநாதர்.

இறைவியார் திருப்பெயர்: சத்யதாயதாக்ஷி, பிரஹதாம்பாள், வேல்நெடுங்கண்ணி.

தல மரம் : வில்வம்.

தீர்த்தம் : பிரம தீர்த்தம்.

வழிபட்டோர் : வித்யாதரர், பிரமன், துருவன், திருமால் ஆகியோர்.

தேவாரப் பாடல்கள் : சம்பந்தர் ஆதியன்



ஆதிரையன்.

திருஞானசம்பந்தர் பாடல்

ஆதியன் ஆதிரையன் னனலாடிய ஆரழகன்
பாதியோர் மாதினொடும் பயிலும்பர மாபரமன்
போதிய லும்முடிமேற் புனலோடர வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்பும்மிடம் வெண்டுறையே

தலவரலாறு

மக்கள் வழக்கில் 'வண்டுதுறை' என்று வழங்கப்படுகிறது. திருக்கயிலை முனிவர்களில் பெருமை மிக்கவரான பிருங்கி முனிவர் சிவபெருமானைத் தவிர வேறு தெய்வத்தை வணங்குதல் கூடாது என்ற வைராக்கியத்துடன் சிவனை மட்டுமே வணங்கி வந்தார். அதையறிந்த சக்தி அம்முனிவரைத் திருத்துவதற்காக அம்முனிவரின் உடலில் சக்தியாக உள்ள உதிரம், சதை முதலிய கூறுகளை அகலச் செய்தாள். கால் தள்ளாடியதால் நிற்க முடியாத அந்நிலையிலும் பிருங்கி முனிவர் சிவனை மட்டும் வழிபட்டார். இரக்கம் கோண்ட சிவபெருமான் முனிவருக்கு இன்னொரு காலைத் தந்து உதவினார். சக்தியும் சிவனை வேண்டி அவரது திருமேனியில் இடது பாகத்தைப் பெற்றார். அர்த்தநாரீஸ்வரர் ஆன சிவனும் சக்தியும் பிரித்தற்கரியவர் என்ற உணமையை உணராமல் பிருங்கி முனிவர் வண்டு உருவம் எடுத்து அர்த்தநாரீஸவரர் திருமேனியில் ஒரு பாதியைத் துளைத்துக் கொண்டு சிவபெருமானை மட்டுமே வணங்கினார். உமையம்மை சிவனின்றி சக்தியில்லை, சக்தி யின்றி சிவனில்லை இவ்விரண்டையும் பிரித்துப் பார்த்தல் கூடாது என்ற உண்மையை முனிவருக்கு உணர்த்தி வண்டு உருவில் ஒரு சதுர்யுகம் எங்களை இணைத்து வழிபட்டுப் பாவம் நீங்குக என்றருள முனிவரும் உண்மை உணர்ந்து அவ்வாறே இருவரையும் இவ்வாலயத்தில் வழிபட்டுப் பாவம் நீங்கப் பெற்றதாக கூறப்படுகிறது.

பிரம்மனுக்கு படைப்புத் தொழிலில் தடை ஏற்பட்டபொழுது இங்கு உமையொருபாகனாகிய சிவபெருமானை வழிபட்டு ஆணையும், பெண்ணையும் தடையின்றிப் படைக்கும் ஆற்றல் பெற்றான் என்று கூறப்படுகிறது. சிவனும் சக்தியும் பிரித்தற்கரியவர் என்ற உணமையை உணராத மகாவிஷ்ணு மகப்பேறு வேண்டி சிவபெருமானை மட்டும் வழிபட்டு அழகிய மன் மதனை மகனாகப் பெற்றார்.

இதனால் கோபம் கொண்ட சக்தி மன்மதன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் எரிந்து அழியுமாறு சாபமிட்டார். தவறை உணர்ந்த மகாவிஷ்ணு இவ்வாலயத்தில் விநாயகர், சோமஸ்கந்தர் ஆகியோரை வழிபட சக்தி சினம் தணிந்து இறக்கும் மன்மதன் மீண்டும் பிழைத்தெழுவான் என்று வரம் அளித்ததாகவும் கூறப்படுகிறது.

பெரிய கோபுரம் உள்ள கிழக்கு நுழைவு வாயிலும், கோபுரம் இல்லாத மேற்கு நுழைவு வாயிலும் கொண்டு ஒரு பெரிய மதிற்சுவருடன் இவ்வாலயம் விளங்குகிறது. கிழக்கு கோபுரம் வழியாக உள்ளே நுழைந்தவுடன் கொடிமரம், பலிபீடம் மற்றும் நந்தி மண்டபம் உள்ளன. வெளிப் பிரகாரத்தில்



www.aanmeegamalar.com

தென்மேற்கு மூலையில் கணபதி சந்நிதியும், வடமேற்கு மூலையில் முருகப்பெருமானின் சந்நிதியும் உள்ளது.

கருவறை முன் உள்ள நடு மண்டபத்தில் விநாயகரும், ஒரு நந்தியும், வடபுறம் தெற்குப் பார்த்த தனி சந்நிதியில் சோமஸ்கந்தர், நடராஜர் மற்றும் பஞ்சமூர்த்திகளும் உள்ளனர். இறைவி வேல்நெடுங்கண்ணி அம்மைக்கு தனி விமானத் துடன் தெற்குப் பார்த்த தனி சந்நிதி உள்ளது.

இறைவன், இறைவி ஆகிய இருவரின் சந்நிதிகளையும் இணைக்கும்படி கருங்கல்லால் கட்டப்பெற்ற வேலைப்பாடு மிக்க தூண்களுடன் கூடிய அழகிய வெளி மண்டபம் உள்ளது. மண்டபத் தூண்களில் தேவார மூவர், பிருங்கி முனிவர் ஆகியோரின் திருஉருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. ஒரு தூணில் நான்கு யுகங்களைக் கண்ட ஆஞ்சநேயரும் உள்ளார்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

கருவறை கோஷ்ட மூர்த்திகளாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர், துர்க்கை, பிரம்மா ஆகியோர் காணப்படுகின்றனர். கிழக்கு வெளிப் பிரகாரத்திலுள்ள மண்டபத்தில் பைரவர், விசுவநாதர், விசாலாட்சி, சம்பந்தர், சனீஸ்வரன், சூரியன், சந்திரன் ஆகியோரைக் காணலாம். அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பிட்சாடணர் உருவச்சிலை பார்த்து ரசிக்க வேண்டிய ஒன்றாகும்.

அர்த்தநாரீஸ்வரர் திருமேனி விசேஷமானது. மாதொருபாகனின் வாகனத்தை உற்று நோக்கினால் இறைவன் உருவம் உள்ள பகுதியில் ரிஷப வாகனமாகவும், இறைவியின் உருவம் உள்ள பகுதியில் சிம்ம வாகனமாகவும் இருப்பதைப் பார்க்கலாம்.

ஆலயத்தின் உள்ளே தலமரமான வில்வ வருட்சம் உள்ளது. ஆலய தீர்த்தம் பிரம திருமேனியின் இடை யில் துளைத்துச் சென்று அவரை மட்டும் வலம் வந்தமையால், அம்பிகை சாபம் தர, வண்டு உருவில் இருந்து இங்கு வழிபட்டார் என்பது வரலாறு. (கருவறையில் வண்டின் ரீங்கார ஒலி கேட்பதாகப் பண்டை நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது கேட்கவில்லை.)

திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் மேல் பாடியருளிய பதிகம் மூன்றாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. சிவபெருமான் யமனை உதைத்தது, திரிபுரம் எரித்தது, இராவணன் கயிலை மலையை எடுத்தது, திருமால் பிரம்மா அடிமுடி காண முடியாமல் அரிதாய் விளங்கியது முதலிய புராண வரலாறுகள் இப்பதிகத்தில் குறிப் பிடப்பட்டுள்ளன. இறைவனின் பெருமையைக் கூறி ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இறைவன் விரும்பும் இடம் திருவெண்டுறை என்று நிறைவு செய்கிறார்.

– சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்,
பேராசிரியர்
S.I.V.E.T கல்லூரி,
சென்னை, போன்:
919003296221
easanaithedi.in


சிவத்திரு.குமரேசன்




www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

You Tube
LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி

54

நாம் மன அமைதி, ஞானம் பெற வேண்டுமானால் தகுந்த ஆன்மீக குருவை நாட வேண்டும். குருவின் மூலமாக ஆன்மீக வழியில் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். உலக இன்ப துன்பங்களைப் பற்றி கவலைப்படாமல் அவற்றை சாட்சியாக இருந்து பார்ப்பவன், பாவ புண்ணியங்களின் பலன்களை பெறுவதற்கு விரும்பாதவன்தான் ஞானம் பெறுவதற்குத் தகுதியானவன் என்று சாஸ்திரம் கூறுகிறது. இதனை கீதையில் கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்று கூறப்படுகிறது.

நாம் ஒரு செயலைச் செய்யும்போது ‘நான் இதனைச் செய்கிறேன்’ என்று கூறுகிறோம். நமது செயல்பாடுகள் எல்லாம் இந்த மூன்று சரீரங்களிலும் மூன்று அவஸ்தைகளிலும் ஊடுருவி நமது மனம் செய்கிறது. நமது செயல்பாடுகளை எல்லாம் நான் சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். நாம் செய்யும் செயல்பாடுகளின் பலன்களை எல்லாம் நமது மனமும் மூன்று சரீரங்களும் மூன்று அவஸ்தைகளும் அனுபவிக்கிறது என்ற ஞானம் நமக்குள் வரவேண்டும். ஆனால் இந்த ‘ நான் ‘ என்ற எண்ணம் நமது உடலைச் சார்ந்தது என்ற எண்ணம் நம்மை விட்டு எளிதில் அகலுவதில்லை.

இந்த நான் என்ற எண்ணம் நமது உடலைச் சார்ந்தது என்ற எண்ணம் நம்மை விட்டு அகல வேண்டும். அவ்வாறு விலகுவதற்கு மனபக்குவம் பெற வேண்டும். இந்த உலகில் நடைபெறும் அனைத்து செயல்கள் நம்மால் நடைபெறவில்லை என்ற மனநிலை வரும்போது நான் சாட்சியாக இருந்து உலக இன்ப துன்பங்களைக் கவனித்துக்கொண்டு இருக்கிறேன் என்ற ஞானம் இயல்பாகவே நம்மிடம் வந்து விடும். \

இந்த உலகில் காணும் இன்ப துன்பங்களை நீ சாட்சியாக இருந்து அவற்றை அனுபவவிக்கும்போது மன அமைதியுடன் வாழலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. நாம் ஒரு செயலை செய்யும்போது நான் செய்கிறேன், எனக்குச் சொந்தமானது என நாம் பேசுகிறோம் அல்லது நினைக்கிறோம். நான் செய்கிறேன் என்று கூறுவது யார்? நமது செயல்களைச் செய்யத் தூண்டுவது யார்? என்று நாம் சிந்தனை செய்வதில்லை. பொதுவாக நமது மனம் ‘நான்’ என்றே இந்த சரீரத்தையே நினைத்து விடுகிறது.

நான் என்ற எண்ணம் மூன்று சரீரங்கள் மற்றும் மூன்று அவஸ்தைகளுக்குள் ஊடுருவி இருக்கிறது. விழிப்புநிலை, கனவுநிலை மற்றும் ஆழ்ந்த உறக்கம் மூன்றினுள் ஊடுருவி இருப்பவனை சாட்சியாக இருப்பவனை துரியம் என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக ஒருவர் வீட்டுக்குள் வந்தவுடன் தன்னோட மகனைப் பார்த்தவுடன் அவரது நடவடிக்கைகள் பொறுப்புள்ள அப்பாவாக இருக்கிறது. அவர் அலுவலகத்திற்கு சென்றவுடன் அலுவலராக செயல்படுகிறார். நண்பனைப் பார்த்தவுடன் நண்பருடன் பேசி அவர் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார். இந்த மூன்று நிலைகளிலும் அவர் செயல்பட்டாலும் பொதுவாக அவர் மனிதன் என்று அழைக்கப்படுகிறார். மனிதனாக இருந்து மூன்று நிலைகளிலும் ஊடுருவி அப்பா, அலுவலர் கணவர் என மாறி விடுகிறார். அதேபோல்தான் மூன்று அவஸ்தைகளுக்குள் ஊடுருவி இருப்பதும் அதற்கு அப்பாற்பட்டு இருப்பதையையும் துரியம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் உலகில் தான் மனிதனாக இருப்பதையே அவனது செயல்பாடுகளினால் நாளடைவில் மறந்து விடுகிறான். உலகில் மனிதர்களிடையே காணும் அப்பா, அம்மா, மகன், மகள் , தாத்தா, பாட்டி ஆசிரியர் மாணவன் நண்பன் போன்ற உலகில் காணும் எண்ணற்றப் பாத்திரங்களாகவே முழுமையாக மாறி, தான் மனிதன் என்பதையே நாளடைவில் மறந்து விடுகிறான். அதாவது ஆசிரியர்



மாணவன் அப்பா மகன் மகள் பேரன் குடும்பம் போன்ற சம்சார சாகரத்தில் நமது மனம் ஒன்றி விடுவதால் மனிதனாகப் பிறந்திருக்கிறோம் என்ற எண்ணத்தையே நாளடைவில் மறந்து விடுகிறோம். அதாவது மனிதன் உலகம் என்னும் சம்சார சாகரத்தில் மூழ்கி விடுகிறான்.

உண்மையான நான் என்பது மூன்று சரீரங்களுக்கும் அப்பாற்பட்டவன் மூன்று அவஸ்தைகளுக்குள் சாட்சியாக இருப்பவன்தான் இந்த நான் என்று புரிந்து கொண்டு பற்றற்று உலகில் செயல்புரிய வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. நமக்குள் இருக்கும் ஆத்மா மூன்று உடல்களுக்கும் மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாக இருந்து வேடிக்கை பார்க்கிறது. நாம் நமது மூன்று சரீரங் களில் ஏதோ ஒன்றினை நான் என்று நினைத்து வாழ்ந்து கொண்டிருப்பதால்தான் உலகில் துன் பம் இன்பம் போன்றவற்றை அனுபவவித்துக் கொண் டிருக்கிறோம்.

ஒரு சம்பவத்தை வேடிக்கையாக பார்த்தால் சாட்சி. அந்த சம்பவத்துக்குள் அவன் சம்பந்தப்பட்டிருந்தால் துயரம் போன்றவற்றை அடைகிறான். மனிதன் தான் சாட்சியாக இருந்து வேடிக்கை பார்ப்பதில்விருப் பம் இருக்கும். அதனை நாம் சில நேரங் களில் மட்டும் விருப்பப்பட்டு சாட்சியாக இருந்து வேடிக்கை பார்க்கிறோம். அப்படியில் லாமல் உலகில் காணும் இன்ப துன்பங்களை எப்போதும் சாட்சியாக இருந்து விரும்பிவேடிக்கை பார்க்கும் போது மோட்சம் என்ற உயர்ந்த நிலையை அடையலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

மூன்று சரீரங்களுக்குள் இருக்கும் ஆத்மா வை பஞ்சகோசம் மறைத்து வைத்திருக்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. பஞ்சகோசம் என்பது ஐந்து கோசங்கள் ஆகும். கோசம் என்றால் பாதுகாப்பு அல்லது மறைத்தல் என்று பொருள்படும். மன்னர்கள் நாட்டை ஆட்சிபுரிந்த காலத்தில் நீண்ட வாள்களை தங்களிடம் பாதுகாப்புக்காக வைத்திருப்பார்கள். அந்த வாள்களை உறையில் வைத்து பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். அதை பாதுகாப்பாக இடுப்பில் வைத்துக்கொள்ள நீண்ட உறை இருக்கும். கோசம் ஆத்மாவை வாள் உறை போன்று மறைத்து வைத்திருக்கிறது என சாஸ்திரம் கூறுகிறது. நகையை மறைத்து வைத்து பாதுகாப்பாக நகைப்பெட்டி இருப்பதுபோல் நமது ஆத்மாவை பஞ்ச கோசங்கள் மறைத்து வைத்திருக்கிறது. பஞ்ச கோசங்கள் மறைத்து வைத்திருப்பதால்தான் நாம் ஆத்மாவை பார்க்கவோ உணரவோ முடிவதில்லை.

நமது மூன்று சரீரங்களையும் மனம் ஏதோ ஒரு விதத்தில் ஈர்த்து விடுவதால் இந்த ஆத்மா மறைக்கப்பட்டு விடு கிறது. இந்த மூன்று சரீரங்களின் மீது நாம் இடைவிடாது பற்று வைத் திருப்பதால்தான் பஞ்ச கோசங்கள் ஆத்மாவை அறிய முடியாமல் மறைத்து வைத்து விடுகிறது.

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

எடுத்துக்காட்டாகநாம் திரைப்படம் பார்க்கப் போகிறோம். நமக்கு முன்னால் நீண்ட வெண்திரை இருப்பதை பார்க் கிறோம். நாம் அந்த நீண்ட வெண்திரையை பார்க்க விரும்புவ தில்லை. ஒருவர் சினிமாவுக்கு சென்று விட்டு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரிடம் எங்கு போய் வந்தீர்கள் என்று கேட்டால், நான் வெண்திரையை பார்க்கப் போனேன் என்று சொல்வதில்லை. சினிமா பார்க்கச் சென்றேன் என்றுதான் கூறுவார். நாம் வெண்திரையில் ஒளி வெள்ளத்தில் காணும் நிழல்களைப் பார்த்து சிரிக்கிறோம் அழுகிறோம் இன்னும் ஏதேதோ செய்கிறோம் மனம் அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. நமது மனம் அப்போது அந்த நீண்ட வெண்திரையை முற்றி லும் மறந்து அதில் காணும் நிழல்களைக் கண்டு மகிழ்கிறோம்.

வெண்திரையில் அசையும் நிழல்களைப் பார்த்தவுடன் வெண்திரையை முற்றிலும் மறந்து விடுகிறோம். அதாவது வெண்திரையில் ஒளிவெள்ளத்தில் தெரியும் நிழல்களில் நமது மனம் முழுமையாக ஈடுபட்டு விடுகிறது. அதற் குக் காரணம் நிழல்களின் ஈர்ப்பால், அந்த நிழல்களுக்கு ஆதாரமாக இருக்கும் வெண் திரையை அப்போது மனம் மறந்து விடுகிறது. அதைப்போல்தான் வெண்திரைதான் ஆத்மா, அதில் காணும் நிழல்கள் என்பது மூன்று சரீரங் கள், மூன்று அவஸ்தைகள் என்று புரிந்து கொள்ளலாம். நிழல்கள் என்பது உலகில் காணும் இன்ப துன்பங்கள் என்று கூறலாம் இன்ப துன்பங்களில் நமது மனம் தன்னை மறந்து ஈடுபட்டு விடுவதால் வெண்திரையை மறந்து விடுவதுபோல் ஆத்மாவை நாம் மறந்து விடுகிறோம். அதாவது மூன்று சரீரங்களுக்கும், மூன்று அவஸ்தைகளுக்கும் ஆதாரமாக இருக்கும் ஆத்மாவை நமது மனம் உணர முடிவதில்லை. நமது ஆத்மாவை ஆதரமாகக்கொண்டுதான் மூன்று சரீரங்கள் மூன்று அவஸ்தைகளும் இயங்கிக்கொண்டு இருக்கிறது. வெண்திரையை ஆதாரமாகக் கொண்டு இயங்கும் நிழல்களை(சினிமா) ஆனந்தமாக பார்த்து மகிழ்கிறோம். நமது மூன்று சரீரங்கள் இயங்க ஆதாரமாக இருப்பது பரம்பொருள் ஆத்மா ஆகும்.

சினிமாவில் ஒளி வெள்ளத்தில் இயங்கும் நிழல்கள் வெண்திரையை மறைத்து



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

விடுவதைப்போல் ஆத்மாவை பஞ்ச கோசங்கள் மறைத்து விடுகிறது. எனவே நாம் ஆத்மாவைப் பார்க்கவோ உணரவோ முடிவதில்லை. நாம் மூன்று சரீரங்களை நான் என்று எண்ணாமல் மோட்சத்தை நோக்கிச் செல்ல வேண்டும். அதாவது ஆத்மாவை உணர தக்க குருவை நாடி பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். மூன்று சரீரங்கள் மீது உள்ள அபிமானங்களை ஒவ்வொன்றாக நாம் விடும்போது கிடைக்கும் அனுபவங்கள் மூலம் ஆத்மாவை உணர முடியும்.

அதாவது மூன்று சரீரங்களின் மீது உள்ள அபிமானத்தை விட்டு சாட்சியாக இருந்து உலகில் காணும் இன்ப துன்பங்களைப் பார்ப்பதற்கு மனப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அதற்கு நாம் ஆன்மீக வழியில் சென்று தக்க குருவின் மூலம் மனப்பயிற்சி பெற வேண்டும்.

பஞ்ச கோசங்கள் என்பது அன்னமய கோசம், பிராணமய கோசம் மனோமய கோசம் விஞ்ஞான மய கோசம், ஆனந்த மய கோசம் ஆகும். நமது மூன்று சரீரங்களில் ஸ்தூல சரீரம் அன்னமய கோசமாக செயல்படுகிறது. நாம் சாப்பிட்ட உணவின் மாற்றத்தால் நாம் சாப்பிடும் உணவுப் பொருள்கள் எல்லாம் உடலில் உள்ள இரத்தம் சதையாக, எலும்பு வளர்ச்சி போன்றவையாக நமது உடல் மாறி விடுகிறது. மனதின் மாற்றத்தினால் இந்த ஸ்தூல உடல் தோன்றியது. அதேபோல் நாம் உண்ணும் அன்னத்தின் மூலமாக நமது உடல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த ஸ்தூல உடல் உணவின் மாற்றத்தினால் தோன்றி, உண்ணும் உணவால் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு, இறுதியில் பிற உயிர்களுக்கு ஸ்தூல சரீரம் உணவாக போய் விடுகிறது. இதுதான் அன்னமய கோசத்தின் தன்மையாகும். எடுத்துக்காட்டாக பயிர் அதைச்சுற்றி களைகள் இருக்கும். பயிர்கள் நன்கு வளர வேண்டும் என்றால் அதைச்சுற்றி உள்ள களைகளை நீக்கப்பட வேண்டும். அந்தக் களைகள் நீக்கி அந்த பயிருக்கே நாம் உரமாக களைகளைப் போட்டு விடுகிறோம். அதேபோல் இறுதியில் பிற உயிர்களுக்கு நமது ஸ்தூல சரீரம் உணவாக போய் விடுகிறது. .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
**சந்தா**

**UPI மற்றும் வங்கி**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**